பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 05 வியாழக்கிழமை 18.03.2021 கதிர் 133

### இனி இது ரகசியம் அல்ல!

ஒரு பெரிய கோட்டை சிறியதாக்க வேண்டும் என்றால் அதற்கு ஒரு வழியுண்டு என்பார்கள். பக்கத்தில் ஒரு கோட்டை இன்னும் கொஞ்சம் பெரிதாக வரைவதுதான் அந்தத் தந்திரம்.

அந்தத் தத்துவத்தைதான் கோட்டா அரசு இப்போது பயன் பக்கம்02

# ரவி கைது!

## வெலிக்கடை சிறையில் அடைப்பு



முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 8 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளனர்.

நல்லாட்சி அரசின் காலத்தில் 2016ஆம் ஆண்டு இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி வழக்கு விசாரணைகள் நேற்று நடை 02

# வடக்கு சுகாதாரத் தொண்டர்கள் கோட்டாவைச் சந்திக்க ஏற்பாடு

## போராட்டக் களத்தில் மஹிந்தானந்த வாக்குறுதி



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்திப்பதற்குத் தான் ஏற்பாடு செய்து தருவாரென அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே உறுதி வழங்கியுள்ளார்.

வடக்குமாகாணசுகாதாரத்தொண்டர்கள் 17 ஆவது நாளாகவும் நேற்று 02

# சுமந்திரன், சாணக்கியன் உட்பட 31 பிரமுகர்கள் மீது பேரணியில் சென்றமைக்காக பொத்துவிலில் வழக்கு!

பொத்துவில்,மார்.18

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரையான பேரணி பொத்துவிலில் ஆரம்பித்தபோது அதில் சென்றவர்கள் என்று கூறப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், கோவிந்தன் கருணாகரன் (ஜனா), இரா. சாணக்கியன், த.கலையரசன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோருடன் சட்டத்தரணி சுகாஷ் உட்பட 31 பேருக்கு எதிராக பொத்துவில் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

அந்த வழக்கு நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த பெப்ரவரி 3 ஆம் திகதி பொத்துவிலில் இந்தப் பேரணி ஆரம்பித்த போது அதில் கலந்து கொண்டவர்கள் எனக் கருதப்படும் சிவில் அமைப்பு பிரதிநிதி மட்டக்களப்பு சிவலோகநாதன், கல்முனை மாணவர் மீட்பு தலைவர் கணேஷ், சட்டபீட மாணவன் நிஷாந்தன், 02

# வவுனியா ஆடைத்தொழிற்சாலையில் மேலும் 10 பேருக்கு கொரோனா உறுதி

## மொத்தத் தொற்றாளர்கள் 36 ஆக அதிகரிப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றுவர்களில் மேலும் 10 பேருக்கு நேற்றிரவு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதையடுத்து குறித்த ஆடைத்தொழிற்சாலையில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 36 ஆக உயர்வடைந்துள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, கண்டி வீதியில் அமைந்துள்ள பிரபல ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் 24 பேர் கடந்த இரு வாரங்களில் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தனர். இதையடுத்து குறித்த ஆடைத் தொழிற் 02

# யாழ். பல்கலை மாணவர்கள் மூவர் உட்பட மேலும் 9 பேருக்குக் கொரோனா தொற்று

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் மூவர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 9 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

இவர்களில் ஒருவர் யாழ். நகரைச் சேர்ந்த 12 வயதுச் சிறுமி என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 62 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் எவருக்கும் தொற்று இல்லை.

இதேவேளை, 02

# வடக்கின் காணி ஆவணங்களை மீண்டும் யாழ். செயலகத்தில் உடன் ஒப்படையுங்கள்

## சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் மஹிந்தானந்த உத்தரவு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)



யாழ்ப்பாணம், மார்ச் 18

அநுராதபுரத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட வடக்கு மாகாண காணி திணைக்களத்தின் கோப்புக்கள் இன்றைய தினத்துக்குள் மீண்டும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமே சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்துள்ளார். 02

# மேலும் மூவர் மரணம்; கொரோனா காவு 537

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மெதிரிகிரிய பிர தேசத் தைச் சேர்ந்த 72 வயதான ஆண் ஒருவரும், பொல்கஸ் ஓவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதான பெண் ஒருவரும், ஆடிகம பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதான ஆண் ஒருவரும் இறுதியாக உயிரிழந்தவர்களின் பட்டியலில் பதிவாகியுள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 537 ஆக அதிகரித்துள்ளது. 02

# சர்வதேசத்திடம் நீதி கோரி யாழில் மாபெரும் பேரணி!

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தக் கோரி, யாழ்ப்பாணத்தில் நேற்று மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்துடன் கூடிய பேரணி முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம், யாழ்ப்பாணம் கிட்டு பூங்காவில் இருந்து பேரணியாக ஆரம்பித்து, சுழற்சி முறையில் உணவு தவிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றுவரும் நல்லை ஆதீனம் வரை சென்று நிறைவடைந்தது.

இந்தப் பேரணியில் வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், சிவில் சமூக உறுப்பினர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் 02

# இசை அறிஞர் மறைந்தார்



இசை உலகின் ஜாம்பவான், மூத்த இசைக்கலைஞன் சங்கீத 02

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலேயே முன்னாள் ஆளுநர் அஸாத் கைது

## அமைச்சர் வீரசேகர தெரிவிப்பு




உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலேயே மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலி கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார். 02

### இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படுத்துகின்றது போலும். முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணநாயக்காவின் கைதின் பின்னணி குறித்து கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள் இப்படித்தான் தகவல் வெளியிடுகின்றன.

ரவி கருணநாயக்காவும் சம்பந்தப்பட்ட – முன்னைய நல்லாட்சி அரசுக் காலத்தின் – பிணைமுறி மோசடி விவகாரத்தில் அரசுக்குஏற்பட்ட நிகரநஷ்டம் 1.2 பில்லியன் ரூபா அளவுக்கு இருக்கும் என்று கணக்கிடப்படுகின்றது.

அதேசமயம், சீனியை குறைந்த விலைக்கு மக்களுக்கு விநியோகிக்க என்ற பெயரில், அதற்கான முழு வரிகளையும் ரத்துச் செய்து இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்க, அந்த வரிச்சலுகையுடன் சீனியை இறக்கி, குறைக்கப்படாத பழைய விலைக்கே விற்றதன் மூலம் அரசுக்கு நெருக்கமானவர்கள் என்று கூறப்படும் வர்த்தகர்கள் சுருட்டிய தொகை 1.6 பில்லியன் ரூபா வரை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆக, பிணை முறி ஊழலை விட, சீனி இறக்குமதி ஊழல் பெரியது என்ற தகவல் தென்னிலங்கையில் வைரலாகப் பரவும் சூழ்நிலையிலேயே, பிணைமுறி ஊழலுடன் பெயர் அடிபட்ட முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணநாயக்காவைக் கைது செய்து காவலில் எடுத்து கதையைத் திருப்ப முனைகின்றது ஆட்சித்தரப்பு.

அதுவும், சீனி இறக்குமதி விடயத்தில் பெரும்தொகை ஊழல் இடம்பெற்றிருக்கின்றது என்பதை நிதி அமைச்சு வட்டாரங்களே உறுதிப்படுத்தின என்ற தகவல் வெளியாகி, இந்த அரசின் பெயரும் நாறடிக்கப்படத் தொடங்கிய சமயத்தில்தான் இப்படி திசை திருப்பல் முயற்சி முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

இதேசமயம், மிச்ச சொச்சமாக எஞ்சியிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இப்போது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளே இருந்து பெரும் குடைச்சல் கொடுத்துக் கொண்டிருப்பவர் ரவி கருணாநாயக்கா. கட்சிக்குள் அவர் விரும்பி எதிர்பார்த்த பதவி எதையும் ரணில் இப்போது அவருக்கு வழங்கவில்லை. இருந்த தேசிய அமைப்பாளர் பதவியையும் அவரிடமிருந்து ரணில் பிடுங்கி விட்டார்.

கடந்த வாரம் கட்சியின் முக்கிய கூட்டம் ஒன்றில் ரவி கருணநாயக்கா கலந்து கொள்ளவில்லை. அக்கூட்டத்தில் ரவி கருணாநாயக்கா குறித்து, கட்சிக்குள் அவருக்கு எதிரான தரப்பினர் பெயர் குறிப்பிட்டு பிரஸ்தாபித்த போது *"அவருக்கு பல வழக்குகள் கூட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. இனி அவர் கட்சி நடவடிக்கைகளில் ஈடுபட வாய்ப்பும் இருக்காது. நேரமும் கிடைக்காது"* என்று கோடி காட்டினாராம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

விடயங்கள் ரணிலுக்குத் தெரிந்துதான் அரங்கேறுகின்றன என்றார் எனக்குத் தெரிந்த மூத்த சிங்கள ஊடகவியலாளர் ஒருவர். அவருக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சமையலறை வரை அத்துப்படி. அவரின் தகவலை நம்பித்தானாகவேண்டியிருக்கின்றது.

இவ்விடயத்தை ஒட்டி இன்னொரு கொசுறுத் தகவலையும் நேற்றிரவு சொன்னார்.

*"நேற்று (செவ்வாய்) இரவு அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் பிறந்தநாள் கொண்டாட்டம். நிகழ்வுக்கு ஜனாதிபதியையோ, எதிர்க்கட்சித் தலைவரையோ அழைக்காத பந்துல குணவர்த்தன பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் அழைத்திருந்தார். பிறந்தநாள் நிகழ்வுக்கு இடையில் மஹிந்தரும், ரணிலும் சற்று நேரம் தனியாக மந்திராலோசனை நடத்தினர். அதன் விளைவாகவும் கூட இந்த திடீர் கைது நடவடிக்கை இருக்கலாம்."* – என்றார் அவர்.

அவரின் அந்தத் தகவலில் எவ்வளவு தூரம் உண்மை, நியாயம் பொதிந்திருக்கின்றதோ தெரியவில்லை.

ஆனால், இப்படி ரவி கருணநாயக்கா திடுதிப்பெனக் கைது செய்யப்பட்டமையின் பின்னால் ஏதோ ஆழமான விடயம் பொதிந்திருப்பதாகவே எனக்குப்படுகின்றது.

*'சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா?'*

– மின்னல் –

### வடக்கு சுகாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு திரும்பும்போது, அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சுகாதாரத் தொண்டர்களைச் சந்தித்துள்ளார்.

இதன்போது, சுகாதாரத் தொண்டர்கள் தமது பிரச்சினைகளை அமைச்சரிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.

குறித்த கலந்துரையாடலின்போது, சுகாதாரத் தொண்டர்களின் பிரச்சினைகளை ஜனாதிபதியிடம் கலந்துரையாட ஏற்பாடு செய்வதாக அமைச்சர் வாக்குறுதி வழங்கியுள்ளார்.

### சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் குணசேகரம், மட்டக்களப்பு மாநகர முதல்வர் சரவணபவான் உள்ளிட்ட 31 பேரின் பெயர்கள் பொத்துவில் நீதிமன்றத்தில் நேற்று வாசிக்கப்பட்டன. அப்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரனும், செங்கலடி தமிழ் உணர்வாளர் தலைவர் மோகனும் மட்டுமே நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்தனர்.

இந்நிலையில் செங்கலடி மோகன் பேரணி இடம்பெற்ற தினமான பெப்ரவரி 3 ஆம் திகதி பொத்துவிலில் சமூகம் கொடுக்கவில்லை என்பதை ஏற்ற பொலிசார் அவரை வழக்கிலிருந்து விடுவிக்குமாறு நீதிவானிடம் கோரியமையையடுத்து அவர் விடுவிக்கப்பட்டார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரனைச் சொந்த சரீர பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் ஏனைய 29 பேருக்கும் நீதிமன்ற அழைப்பாணை கிடைக்கவில்லை என்பதால் வழக்கை எதிர்வரும் ஜூன் 02 ஆம் திகதி வழக்கு ஒத்தி வைத்தமையுடன், அழைப்பாணை கிடைக்காத மற்றைய 29 பேருக்கும் பொலிஸாரை அழைப்பாணைகளை மீள அனுப்புமாறும் கட்டளை பிறப்பித்தார்.

இந்த வழக்கு நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது அங்கு அச்சமயம் பிரசன்னமாயிருந்த தமிழ் மற்றும் முஸ்லிம் சட்டத்தரணிகள் பலர் எழுந்து நின்று எதிராளிகளுக்காகத் தாங்கள் முன்னிலையாகின்றனர் எனப் பதிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### யாழ். பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் 444 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் 6 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட யாழ். நகரைச் சேர்ந்த 12 வயதுச் சிறுமிக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் வசிக்கும் காரைநகர் இ.போ.ச. சாலையில் பணியாற்றும் வாகனத் திருத்துநர் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மல்லாவி மீன் சந்தை தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என்று சுய தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் இருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

வவுனியா ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் பெண் ஒருவர் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணத்திலிருந்து 395 பேரின் மாதிரிகள் முல்லேரியா ஆய்வுகூடத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இவர்களில் மூவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த மூவரும் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள். கிளிநொச்சி, புத்தளம் மற்றும் மாத்தறையைச் சேர்ந்த மூவரே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர் – என்றார்.

### மேலும் மூவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, நேற்று 322 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான நிலையில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 88 ஆயிரத்து 862 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில், 85 ஆயிரத்து 725 பேர் குணமடைந்த நிலையில் 2 ஆயிரத்து 600 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

### ஈஸ்டர் தாக்குதல்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு, கொலன்னவை பிரதேசத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துக் கூறும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மாவனெல்லை புத்தர் சிலை உடைப்புக்கும், வேறு சில செயற்பாடுகளுக்கும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அஸாத் ஸாலி தொடர்புடையவர் என்ற விடயம் தெரியவந்துள்ளது.

ஷரிஆ சட்டம் மற்றும் நாட்டு சட்டம் தொடர்பில் அவர் தெரிவித்த கருத்து அடிப்படைவாதத்தை தூண்டக் கூடியது மற்றும் பயங்கரவாதத்துக்கு வழிவகுக்கக் கூடியதாக இருந்தது. இதனால் அவர் கைதுசெய்யப்பட்டார்.

எனவே, தடுப்புக் காவலில் வைத்து அவரை விசாரிக்கும்போது இந்த உண்மைகள் வெளிவரும் – என்றார்.

இதேவேளை, அஸாத் ஸாலியைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு நீதிமன்றத்தால் நேற்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சாலையில் கடமையாற்றும் 1800 பேரில் 800 பேருக்கும், அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்களிடமும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்று முன்தினம் வெளியாகிய நிலையில் ஆடைத்தொழிற்சாலையைச் சேர்ந்த 2 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. மேலும், ஒரு தொகுதி முடிவுகள் நேற்றிரவு வெளியாகிய நிலையில் ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் 10 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து வவுனியா, கண்டி வீதியில் அமைந்துள்ள பிரபல ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் 36 பேர் தற்போது கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களுடன் தொடர்புடையவர்களைச் சுயதனிமைப்படுத்தும் நடவடிக்கைளைச் சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (100)

### ரவி கைது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெற்றபோது உயர்நீதிமன்றத்தின் மூவர் கொண்ட நீதியரசர் குழுவின் உத்தரவுக்கமைய மேற்படி 8 பேரும் கைதுசெய்யப்பட்டு வெலிக்கடை சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல் வாங்கலில் நட்டம் ஏற்பட்டது எனக் குற்றஞ்சாட்டி சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கே நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

### வடக்கின் காணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)



யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் வாழ்வாதார அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே அவர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

கடந்த வாரம் யாழ். மாவட்ட செயலகத்தில் இருந்து யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களினதும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கோப்புகள் அநுராதபுரத்திலுள்ள அலுவலகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இந்த விடயம் தொடர்பாக நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இதன்போது துறைசார் தரப்பினருடன் தொலைபேசியில் கலந்துரையாடிய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமே குறித்த கோப்புக்களை இன்றைய தினத்துக்குள் மீண்டும் யாழ். மாவட்ட செயலகத்தில் ஒப்படைக்க வேண்டும் எனப் பணித்தார்.

இதேவேளை, அந்தக் கூட்டத்தில் பளை பிரதேசத்தில் காணி அதிகார சபைக்குச் சொந்தமான காணிகளை வெளி மாகாணத்தவர்களுக்கு வழங்கியமை தொடர்பில் பல தரப்பினராலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன் வேறு மாகாணங்களைச் சேர்ந்தவர்களுக்குக் காணி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது எனக் குற்றஞ்சாட்டப்பட்டதுடன் இராணுவத்தினரது பாவனையில் உள்ள காணிகள், அரச காணிகளைக் காணியற்றவர்களுக்கு பகிர்ந்தளித்தல் மற்றும் ஒரு இலட்சம் முயற்சியாளர்களுக்கான காணி பகிர்ந்தளிப்பு போன்றவற்றிலும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கே அப்பிரதேசங்களிலுள்ள காணிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையா? என அமைச்சர் காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் வடக்கு மாகாண இணைப்பு அதிகாரி எஸ் நிமலனிடம் கேட்டார்.

இதற்குப் பதிலளித்த குறித்த அதிகாரி அது உண்மைதான் என்று தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் மஹிந்தனந்த அளுத்கமகே, வடக்கு மாகாண மக்களுக்கு உரித்தான காணிகள் அந்த மாகாண மக்களுக்கே வழங்கப்பட வேண்டும் எனவும், வெளி மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்குக் காணி வழங்குவதை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் உத்தரவிட்டார். அத்துடன் விடுவிக்கப்படாத காணிகள் தொடர்பில் துறைசார் தரப்பினர் நேரடியாகச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

### இசை அறிஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பூஷணம், கலா பூஷணம், பொன்னாலை எஸ். கணபதிப்பிள்ளை அவர்கள் 82 ஆவது வயதில் காலமானார். அனேக இசை விருதுகளைப் பேறாக்கிய பெருமையும், நூற்றுக்கணக்கான சீடர்களை உருவாக்கிய உயர்ந்த இசைஞானமும் கொண்டு விளங்கிய மனோகரம் சங்கீத இசைப்பேராசான் இவராவார். சங்கீத பிரதிக் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றிய காலம் பொற்காலமாகும். சுருதி லய பாவ சாகித்திய பிரமனாகச் சகல ஊடகங்களிலும் பிரகாசித்த இவரது மறைவு இசை உலகிற்கு ஒரு பேரிழப்பாகும்.

### சர்வதேசத்திடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறவினர்கள், அரசியல் கட்சியினர் உட்பட பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சர்வதேசத்திடம் நீதி கோரி கண்ணீர் விட்டு அழுதனர்.

## இன்று இரண்டாவது ஆண்டில் காலடி பதிக்கும்

## ‘காலைக்கதிர்’ நாளிதழின் மாலைத் தினசரி வெளியீட்டின் மகிழ்வில் நாமும் பங்கு கொள்கின்றோம்

| | | |
|---|---|---|
| அருள் மோட்டோர்ஸ் சுழிபுரம் | Northway Family Mart பலாலி வீதி, திருநெல்வேலி. | Beetel Lanka யாழ்ப்பாணம். |
| சிவகணேசன் புடவையகம் யாழ்ப்பாணம் | சயன்ஸ் அக்கடமி நல்லூர், யாழ்ப்பாணம். | கல்யாண மாலை வட சர்வதேச திருமண சேவை உடுப்பிட்டி |
| சசிகா லேணர்ஸ் யாழ்ப்பாணம் | DCM கல்வி நிறுவனம் யாழ்ப்பாணம். | S.V. முருகேசு கிளிநொச்சி |
| தர்மினி நகைமாடம் யாழ்ப்பாணம் | NEC கல்வி நிறுவனம் யாழ்ப்பாணம். | ரூபி நகைமாடம் பலாலி வீதி, திருநெல்வேலி. |
| இளவரசி சேலைச்சோலை யாழ்ப்பாணம் | Techno wolrd கல்வி நிறுவனம் யாழ்ப்பாணம். | Baby Photo பலாலி வீதி, திருநெல்வேலி. |
| சிங்கப்பூர் நகைமாடம் யாழ்ப்பாணம் | DMI கல்வி நிறுவனம் யாழ்ப்பாணம். | செல்வா பலஸ் K.K.S. வீதி யாழ்ப்பாணம். |
| SAM LANKA யாழ்ப்பாணம் | DMI Computer Education கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். | சமுத்திரா மஹால் K.K.S. வீதி மருதனார்மடம். |
| Unity PC System பலாலி வீதி, யாழ்ப்பாணம் | Science Hall கல்வி நிறுவனம் கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். | SUN SHOPING MALL பலாலி வீதி, திருநெல்வேலி. |
| Yarl Smart யாழ்ப்பாணம் | HC International கல்வி நிறுவனம் யாழ்ப்பாணம். | Farmo.lk |
| கிருபா லேணர்ஸ் யாழ்ப்பாணம் | சிறீ சுசிலா நகைமாடம் பருத்தித்துறை | Mathi Colours யாழ்ப்பாணம். |
| N Flash Super Detegent K.K.S. வீதி யாழ்ப்பாணம். | காஞ்சனா நகைமாடம் பருத்தித்துறை | Jaffna Glass House யாழ்ப்பாணம். |
| OCC Multi Centre இணுவில், மருதனார்மடம். | புகழ் புடவையகம் பருத்தித்துறை | Evergreen Printers K.K.S. வீதி யாழ்ப்பாணம். |
| IS Distributor சங்கானை | திரு நடன முருகன் மெடிக்கல்ஸ் நெல்லியடி | EQ Marriage Services |
| SAI CLEANING AND KIDS WORLD பருத்தித்துறை | NEXTGEN COMPUTERS நெல்லியடி | CNR WORLD WIDE EXPRESS பொதிகள் சேவை யாழ்ப்பாணம். |
| அண்ணா பொதிகள் சேவை K.K.S. வீதி யாழ்ப்பாணம். | ஆழ்வார் புடவையகம் நெல்லியடி | ஹரன் புடவையகம் பலாலி வீதி, திருநெல்வேலி. |
| Brens Fashion Planet யாழ்ப்பாணம். | செல்லமுத்தாஸ் புடவையகம் நெல்லியடி | லக்ஷ்மி நாராயணா திருமண சேவை பலாலி வீதி, யாழ்ப்பாணம். |
| PC Park யாழ்ப்பாணம். | கலைவாணி கண்ணாடிக் களஞ்சியம் கலைவாணி புடவையகம் நெல்லியடி | Hik Vision Mega Store பலாலி வீதி, யாழ்ப்பாணம். |
| வாயுபுத்திரா போன் சொப் யாழ்ப்பாணம். | சரவணா TEX நெல்லியடி | சொர்க்கம் திருமண சேவை யாழ்ப்பாணம். |
| விக்கி லேணர்ஸ் யாழ்ப்பாணம். | P.K.R. Baby Needs நெல்லியடி | ST ANTONYS COMPUTER யாழ்ப்பாணம். |

Group of Companies

| | | |
|---|---|---|
| ASIAZONE Vacation Pvt Ltd | யாழ் முற்றம் யாழ்ப்பாணம். | Kudil Products |
| முல்லை ஓய்வு நகர் | | கற்பகவனம் யாழ்ப்பாணம். |
| செம்மணி செம்மணி வார இதழ் | நெய்தல் Beach City | N27 News |


# பொதுச் சட்டத்தை மீறியதாலேயே கைதுசெய்யப்பட்டார் அஸாத் ஸாலி

### இராஜாங்க அமைச்சர் நிமல் லன்ஷா தெரிவிப்பு



மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலியின் வெறுக்கத்தக்க கருத்துக்கள் இன ஒருமைப்பாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. பொதுச் சட்டத்துக்கு அனைத்து இனத்தவர்களும் கட்டுப்பட வேண்டும். இதை மீறி அவர் செயற்பட்ட காரணத்தாலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

– இவ்வாறு கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல்லன்ஷா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அரசியல்வாதிகள் தங்களின் குறுகிய அரசியல் நோக்கத்துக்காக இனங்களுக் கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தி அதனூடாக அரசியல் இலாபம் தேடிக் கொள்கின்றார்கள்.

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலி பொதுச் சட்டத்துக்கு அடிபணிய முடியாது என்று குறிப்பிட்டுள்ள கருத்து தொடர்பில் முறையான விசாரணைகள் அவரிடம் முன்னெடுக்கப் படுகின்றன.

இவ்வாறான கருத்துக்கள் இனங்களுக்கு மத்தியில் முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையிலும், அடிப்படைவாத செயற்பாடுகளைத் தூண்டிவிடும் வகையிலும் அமைந்துள்ளன.

அரசியல்வாதிகள் தங்களின் குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முரண்பாடான கருத்துக்களை குறிப்பிட்டு அதனூடாக அரசியல் இலாபம் தேடிக் கொள்கின்றார்கள்.

நாட்டின் பொதுச்சட்டத்துக்கு அனைவரும் அடிபணிய வேண்டும். சட்டத்தின் முன்னிலையில் இனம், மத மற்றும் மொழி அடிப்படையிலான காரணிகள் செல்வாக்குச் செலுத்தாது.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கம் வகையில் குறிப்பிடப்படும் கருத்துக்களை அலட்சியப்படுத்த முடியாது.

கடந்த நல்லாட்சி அரசு தேசிய பாதுகாப்பை அரசியல் நோக்கத்துக்காகப் பலவீனப்படுத்தியது. இதன் விளைவு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தற்கொலைக் குண்டுத்தாக்குதலாக உருவெடுத்தது.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்கும் செயற்பாட்டை நல் லாட்சி அரசு அரசியல் கோணத்தில் முன்னெடுத்தமையால் அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க முடியவில்லை.

தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கி நாட்டு மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பலமான அரசை ஸ்தாபித்துள்ளார்கள்.

குறுகிய காலத்தில் தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. எமது அரசு தேசிய பாதுகாப்புக்கு மாத்திரம் எந்நிலையிலும் முன்னுரிமை வழங்கும் – என்றார்.

# 70 லட்சம் ஸ்பூட்னிக் வி தடுப்பூசிகளை கொள்வனவு செய்ய அரசாங்கம் திட்டம்

*ரஷ்யா தயாரிக்கும் 70 லட்சம் ஸ்பூட்னிக் விஷ கொரோனா தடுப்பூசிகளை கொள்வனவு செய்ய இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகக் கொரோனாத் தடுப்பு நிலையம் தெரிவித்துள்ளது.*

*இலங்கையின் தேசிய மருந்தாக்கல் ஆணைக்குழு அவசர பயன்பாட்டுக்காக ஸ்பூட்னிக் விஷ தடுப்பூசிக்கு இந்த மாத தொடக்கத்தில் அங்கீகாரம் வழங்கியிருந்தது.*

*இந்நிலையில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் ஸ்பூட்னிக் விஷ தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வது குறித்து பேசப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இதேவேளை ரஷ்யாவிலிருந்து ஸ்பூட்னிக் விஷ தடுப்பூசியின் முதல் தொகுதியை பரிசாக இலங்கை பெறலாம் என ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.*

*இலங்கைக்கான ரஷ்யாவின் தூதுவர் தன்னுடன் பேசினார் எனவும், ஸ்பூட்னிக் விஷ தடுப்பூசியின் முதல் தொகுதியை பரிசாகப் பெறுவதற்கான சாத்தியம் தொடர்பாகவும் விவாதித்தார் எனவும் அவர் கூறினார்.*

*இலங்கையில் தற்போது சீரம் இன்ஸ்டிடியூட் ஒப் இந்தியாவிலிருந்து பெறப்பட்ட ஒக்ஸ் போர்ட் அஸ்ட்ராசெனெகா கொரோனாத் தடுப்பூசி பொது மக்களுக்கு செலுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.*

# 200 ரூபாவைக் கடந்தது அமெ. டொலரின் பெறுமதி!

மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 200.06 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இன்று (செவ்வாய்க்கிழமை) மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று வீதத்தின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்விலை 195.28 ஆக உயர்ந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய நிலைவரப்படி அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 198.96 ரூபாவாகவும் கொள்முதல் விலை 194.42 ரூபாவாகவும் காணப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## புதுடில்லியை நம்பும் கொழும்பு

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான பிரேரணை மீதான வாக்கெடுப்பு இன்னும் நான்கு அல்லது ஐந்து நாள்களில் இடம்பெறவிருக்கின்றது.

மேற்குலகின் வியூகத்துக்குள் சுற்றிவளைக்கப்பட்டு, நெருக்கு வாரத்துக்குள் சிக்குண்டிருக்கும் இலங்கை, அந்த சர்வதேச அரங்கில் தனக்கு எதிராகக் காட்டமான இராஜதந்திர வாசகங்களுடன் நிறைவேற்றப்படக் கூடிய பிரேரணை தனக்கு மிகப் பெரிய இராஜதந்திர பின்னடைவு என்பதை நன்கு உணர்ந்துள்ளது என்றே தெரிகின்றது.

எனினும், விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற பாணியிலான சாக்குப் போக்குக்கு கொழும்பு தயாராவதாகவே தோன்றுகின்றது.

மேற்குலக நாடுகள் தமக்குள் ஒன்று சேர்த்து எமக்கு என்ன நெருக்குவாரத்தைத் தந்தாலும் நாம் அதற்கு அடிபணிய மாட்டோம், எமது பிராந்தியத்தில் வாக்களிக்கும் உரிமையுள்ள நான்கு நாடுகளுமே – இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் ஆகியவை நான்குமே – எமக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள், யுத்தக் குற்றச்சாட்டுகள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்ற குற்றப் பகர்வுகளை ஏற்றுக்கொள்ளவேயில்லை என்று சமாதானம் சொல்ல தயாராகின்றது கொழும்பு என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் ஆகியவை மூன்றும் இலங்கைக்கு எதிரான பிரேரணையை நிராகரித்து வாக்களிக்கும், வாக்களிப்பின் போது இலங்கையை அதன் மூலம் காப்பாற்றும் என்று நம்பப்படுகின்றது.

ஆனால், இப்பத்தியில் நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி, இந்தியா இந்தக் கணம் வரை இவ்விடயத்தில் மதில் மேல் பூனை நிலைப்பாட்டையே வெளிப்படுத்தி வருகின்றது.

முன்னாள கடற்படைத் தளபதியான இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேராசிரியர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே இந்த விவகாரத்தில் இந்தியப் பங்களிப்புக் குறித்து அதீத நம்பிக்கையை நேற்றும் வெளியிட்டிருக்கின்றார்.

இலங்கையின் உடனடி அயல்தேசம் என்ற வகையில் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டையும் இறைமையையும் பேணுவதில் இந் தியா மிக உறுதியாக இருப்பதாகக் குறிப்பிட்டு அதனால் ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் இந்தியா தங்களைக் காப்பாற்றும் என்று மனக் கோட்டை கட்டுகின்றார் அடமிரல் கொலம்பகே.

ஆனால், கொழும்பில் மூத்த பத்திரிகையாளரும் அரசியல் விமர்சகருமான பெயர் குறிப்பிட விரும்பாத அவதானி ஒருவர், வெளிவிவகார அமைச்சுச் செயலாளரின் இந்த நம்பிக்கை நகைப்புக்கிடமானது என்பது குறிப்பிடுகின்றார்.

*“ஆம், இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடும், தனித்துவ இறைமையும் முக்கியமானவை. அதை மதிக்கின்றோம் என்றுதான் இந்தியா திரும்பத் திரும்பக் கூறுகின்றது. ’அயலில் உள்ள நாட்டின் உறவுதான் முக்கியமானது. எங்களின் வெளியுறவுக் கொள்கையில் அதற்கு முன்னுரிமை கொடுக்கின்றோம்’ என்றெல்லாம் கூட புதுடில்லி உறுதியாகக் கூறுகின்றது. கூறுவது மட்டுமல்ல, அதில் உறுதியாக செயற்படவும் அது தயாராக இருக்கின்றது. ஆனால், இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டையும் இறைமையையும் மதித்துப் பேணுவதற்கு ஒரு நிபந்தனையையும் பூடகமாக – நுணுக்கமாக – இந்தியா விதித்திருக்கின்றது. அது புதுடில்லியின் அண்மைக் கால கருத்து வெளிப்பாட்டில் தெளிவாகவும் உறுதியாகவும் பிரதிபலிப்பதை நாம் காண முடியும்.*

*“இலங்கையில் தமிழர்களின் நீதி, நியாயமான எதிர்பார்ப்புகள், அபிலாஷைகள் சட்டபூர்வமாக நிறைவேற்றப்பட வேண்டும், அதிகாரங்கள் அவர்களுக்கு உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதற்கு இலங்கை அரசு இணங்கிய அரசமைப்பின் 13 ஆவது திருத்தம், அதற்கு அப்பாலும் சென்று அவை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று இந்தியா ஜெனிவாவிலேயே – ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிலேயே – வெளிப்படையாகத் தெரிவித்துள்ளது.*

*“இவ்விடயங்களில் ஆக்கபூர்வமான பிரதிபலிப்புகளை – நம்பிக்கைத் தரும் விதத்தில் – இலங்கை வெளிப்படுத்தாத வரையில் ஜெனிவாவில் கொழும்புக்கு முதுகு கொடுக்க புதுடில்லி இணங்காது என்றே தோன்றுகின்றது.*

*“இந்தியாவுக்குக் கொடுத்த பல வாக்குறுதிகளை கொழும்பு நிறைவேற்றாமல் ஏமாற்றி வருகின்றது என்ற கசப்புணர்வு புதுடில்லி அதிகார வர்க்கத்துக்கு தாராளமாக உண்டு. ஆகவே, வெளிப்படையாக காத்திரமாகத் தோன்றக் கூடிய பதில் பிரதிபலிப்புகளைக் கொழும்பு காட்டாத வரை, புதுடில்லியின் கரிசனைப் பார்வை கொழும்பு பக்கம் விழாது என்றே நம்புகிறேன். ஜெனிவாவில் இம்முறை மேற்கு நாடுகளுடன் சேர்ந்து பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை”.* – என்றார் அந்த மூத்த பத்தி எழுத்தாளர்.

முன்னாள் படை அதிகாரிகளை வைத்து சர்வதேச இராஜதந்திரத்தைக் கையாளும் முன்னாள் இராணுவ அதிகாரியான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முயற்சி ஜெனிவாவோடு பெரும் அடிசறுக்கலாக மாறினாலும் வியப்பதற்கில்லை.

# முஸ்லிம்களின் புர்கா தடை விவகாரத்தில் உலக நாடுகள் தாக்கம் செலுத்த முடியாது!

## கெஹலிய சண்டித்தனம்



புர்கா தடை விவகாரத்தில் உலக நாடுகள் தாக்கம் செலுத்த முடியாது என அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பைக் கருத்திற் கொண்டே புர்கா தடை தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், இலங்கை மாத்திரம் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை எனவும் உலக நாடுகள் பலவும் புர்காவைத் தடை செய்துள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புர்கா தொடர்பாக நீண்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல் மற்றும் கடந்த 10 முதல் 15 வருடங்களுக்குள் ஏற்பட்டுள்ள கலாசார மாற்றங்கள் தொடர்பாக இந்த விடயத்தில் கூடுதல் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் நீண்ட காலமாக முஸ்லிம் மக்களுடனான சமூக உறவு பேணப்படுகிறது. அதில் எவ்வித சிக்கலும் காணப்படவில்லை. எனினும், அண்மைக்காலமாக புர்கா உள்ளிட்ட பல வியடங்களில் கலாசார மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த விடயங்கள் ஏதேனுமொரு வகையில் தேசியப் பாதுகாப் புக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடும் என்ற அடிப்படையில் உலகின் பல நாடுகள் இவற்றைத் தடை செய்துள்ளன.

எனவே, இது தொடர்பாக கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனை எவ்வாறு செயற்படுத்துவது என்பது தொடர்பாகவும் உரிய காலத்தில் அவசரமின்றி தீர்மானிக்கப்படும்.

இதேவேளை, ஜெனிவா அமர்விற்கும் புர்கா விவகாரத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இது உள்நாட்டுப் பாதுகாப்புடன் தொடர்புடைய விடயமாகும். எனினும், சர்வதேச ரீதியில் பல நாடுகள் இவற்றைத் தடை செய்துள்ளன. பாதுகாப்புக்கான அச்சுறுத்தலாகக் கருதியே உலக நாடுகள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளன. எனவே, இலங்கை தேசியப் பாதுகாப்பை மாத்திரம் கருத்திற்கொண்டுதான் இது தொடர்பாக ஆராய்ந்து வருகிறது.

முஸ்லிம் சமூகத்தினர், முஸ்லிம் தலைவர் மற்றும் அரசாங்கம் உள்ளிடவற்றில் அரபு மொழிக் கல்வி தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு வருகிறது.

அத்தோடு, மத்ரஸா பாடசாலைகள் தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இது மிக முக்கிய விடயம் என்பதால் துரிதமான தீர்மானங்களை எடுக்க முடியாது. புர்கா மற்றும் நிஹ்காப் ஆகியவை தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. – என்றார்.

# பொலிஸாரின் தாக்குதலைக் கண்டித்து நீதி கோரி வட்டக்கச்சியில் கதவடைப்பு!





கிளிநொச்சி, வட்டக்கச்சிப் பகுதியில் இளம் குடும்பஸ்தரின் கொலையைக் கண்டித்தும் அதற்கு நீதி கோரியும் அவரது குடும்ப உறுப்பினர்கள்மீது தரும்புரம் பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்தும் கதவடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வட்டக்கச்சி பிரதேசத்தில் நேற்று (புதன்கிழமை) முழு கதவடைப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் பொதுச் சந்தை மற்றும் வர்த்தக நிலையங்களை மூடி மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

கிளிநொச்சியில் வட்டக்கச்சிப் பகுதியில் கடந்த பத்தாம் திகதி இடம்பெற்ற கத்திக் குத்துச் சம்பவத்தில் அருளம்பலம் துஷ்யந்தன் என்பவர் உயிரிழந்தார். இந்நிலையில், கத்தியால் குத்திய நபரின் வீட்டுக்குத் தீ வைக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து, கடந்த 15 ஆம் திகதி காலை பத்து மணியளவில் சந்தேகநபர்களின் வீட்டில் சில பொருள்களை எடுத்துச் செல்வதற்கு, அவரின் உறவினர்கள் பொலிஸாரின் பாதுகாப்புடன் சென்றிருந்தனர்.

இந்நிலையில், இறந்தவரின் மனைவி மற்றும் சகோதரிகள் உட்பட கிராம மக்கள் சிலர் ஒன்று சேர்ந்து இறந்தவருக்கு நீதி கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் போதுமான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்து பொலிஸாருடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து பொலிஸார், தாக்குதலுக்கு இலக்காகி இறந்தவரின் மனைவி மற்றும் சகோதரிகள்மீது தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையிலேயே, பொலிஸாரின் தாக்குதலைக் கண்டித்தும் நீதி கோரியும் கதவடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# பொலிஸ் தாக்கிய குடும்பஸ்தரை நேரில் சந்தித்த சிறிதரன் எம்.பி.!

தருமபுரம் பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளானோரை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்து விடயங்களை கேட்டறிந்து கொண்டார்.

வட்டக்கச்சியில் அண்மையில் கத்திக் குத்துக்கு உள்ளாகி ஒருவர் உயிரிழந்திருந்தார். அவரின் மனைவி மற்றும் சகோதரர்கள் மீது கடந்த திங்கட்கிழமை பொலிஸார் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். பொலிஸாரின் பக்கச்சார்பான கொடூர அராஜகத்தனமான செயலை சிறிதரன், தாக்குதலுக்கு உள்ளானோரிடம் இருந்து கேட்டறிந்து கொண்டார்.



அவரின் உறவினர்களால், பொலிஸார் தற்போது மேற்கொள்ளும் விசாரணைகளில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை எனவும் பக்கச்சார்பான முறையில் செயற்படுகின்றனர் எனவும் தெரிவித்தனர். கொல்லப்பட்டவரின் மனைவி மற்றும் சகோதரர்களைத்தான் அவர்கள் தாக்குகின்றார்கள் என்று எவ்வாறு நம்புவது என்பது தொடர்பிலும் கேள்வி எழுப்பினர்.

# உரிமையும் அபிவிருத்தியும் தமிழ் மக்களுக்கு அவசியம்!

## சாணக்கியன் வலியுறுத்து



அபிவிருத்தி என்ற பெயரில் காணிகள் பறிபோவதற்கு நாங்கள் அனுமதி வழங்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அபிவிருத்திக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் எங்களுக்கு உரிமையும், அபிவிருத்தியும் வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக உள்ளோம் எனவும் தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி பிரதேச சபை அபிவிருத்திக் குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றிருந்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாகக் கருத்து வெளியிட்ட இரா.சாணக்கியன் –

"களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் சிறு கைத்தொழில் உற்பத்திகளைச் செய்வதற்கு வளங்கள் இல்லை. இது ஒரு நகரப்புறமாகையினால் - தகவல் தொழில்நுட்பத்துறையை அமைத்து இளைஞர்களை முன்னேற்றலாம் என்பதற்காக ஒரு தகவல் தொழில்நுட்ப மத்திய நிலையத்தைக் கொண்டு வருவதற்கு பிரதேச செயலாளரிடம் கோரிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தேன். அதற்கு அவர் தனக்கு இதற்கு முன்னரே கடிதமொன்று வந்ததாகவும், அதற்கு காணி இல்லை என பதிலனுப்பியதாகவும் தெரிவித்தார்.

அதற்கு நான், அதைக் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தினுள் உள்வீதிகளில் உள்ள அரச காணிகளில் அமைக்கலாம் எனக் கூறினேன்.

இதனை உடன் கவனத்திலெடுத்து சீதா அரம்பிபொலவிற்கு அனுப்புவதற்கு அபிவிருத்திக் குழுத் தலைவர் சிவநேசத்துரை சந்திரகாந்தனும் சம்மதம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அபிவிருத்திக்கு எதிரானவர்கள் அல்லர். அபிவிருத்தியென மக்களிடம் தரப்படும் விடயங்கள் அனைத்தும் பரிசளிப்பதாக மக்களுக்கு வழங்கப்பட்டாலும், அவை மக்களிடமிருந்து அறவிடப்படும் வரிப் பணத்தின் மூலமே அரசாங்கம் மேற்கொள்கின்றது.

இந்த வேலைத்திட்டங்களை அரசாங்கமே மேற்கொள்கின்றது என நாங்கள் நினைக்க வேண்டிய தேவை இல்லை. இது எங்களின் உரிமை. இதை நாங்கள் கேட்டெடுக்க வேண்டும். எங்களுக்கு உரிமையும், அபிவிருத்தியும் வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக உள்ளது.

அபிவிருத்தி என்ற பெயரில் எங்களது காணிகள் பறிபோவதற்கு நாங்கள் அனுமதி வழங்க முடியாது." - எனக் குறிப்பிட்டார்.

# மாகாணசபை முறைமையை நீக்க ஒருபோதும் இணங்கோம்!

## எதிர்க்கட்சி உறுதி



மாகாண சபை முறைமையை நீக்குவதற்கு தாம் ஒருபோதும் இணங்கப்போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தனாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் –

அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படை நடவடிக்கையாகவே மாகாண சபை கொண்டுவரப்பட்டது.

தற்போது 40 வருடங்கள் வரை கடந்துள்ள நிலையில், அதன் நன்மை தீமை குறித்து, கருத்துக்களை முன்வைக்க முடியும்.

இந்தக் காலகட்டத்தில் அதனைச் செயற்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து, அதனை நிரந்தரமாகக் கொண்டு செல்வதற்கு நடவடிக்கைகளை எடுப்பதைத் தவிர, அதனை நீக்குவதற்கு நாம் ஒருபோதும் இணங்குவதில்லை.

மாகாண சபை மக்கள் பிரதிநிதிகளுக்க, மாகாண சபையின் மொத்த செலவில் 0.5 வீதமே செலுத்தப்படுகின்றது.

அனைத்து ஏனைய செலவுகளும், மாகாண சபையின் ஊடாக, கல்வி, சுகாதாரம், வீதிப் புனரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் மக்களுக்குத் தேவையான முன்னுரிமையான திட்டங்களுக்கே பயன்படுத்தப்படுகின்றன. - எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மக்கள் இன்னல்களை எதிர்கொள்ள அரசின் தோல்வி வழிவகுக்குமாம்!

## ஜே.சி.அலவத்துவல கூறுகின்றார்



அரசாங்கத்தின் தோல்வி பொது மக்கள் மேலும் இன்னல்களை எதிர்கொள்ள வழிவகுக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், தற்போது அனைத்து துறைகளிலும் அரசாங்கம் தோல்வியுற்றுள்ளது எனக் கூறினார்.

தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஆண்டு முழுவதும் நீடித்தால் எதிர்காலத்தில் பொது மக்களுக்கு மிகவும் கடுமையான பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே அரசாங்கம் தனது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களை ஒதுக்கி வைத்து பொதுமக்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் ஜே.சி.அலவத்துவல கேட்டுக்கொண்டுள்ளார்.

# நாட்டை முழுமையாக முடக்குவது நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்று!

## பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சங்கம் தெரிவிப்பு

நாட்டை மீளவும் முழுமையாக முடக்குவது என்பது நடைமுறைக்கு சாத்தியமற்றது என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகப் பண்டிகைக்காலத்தில் நாட்டை முழுமையாக முடக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், இது தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும் போதே பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோகன இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியில் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீளவும் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும், அதற்கான முதலீட்டு மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில், மீண்டும் நாட்டை முடக்குவது நடைமுறைக்குச் சாத்தியமற்றதாக காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆகவே, பொதுமக்கள் இந்தப் பண்டிகை காலப்பகுதியில் உரிய சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, பாதுகாப்பாக செயற்பட வேண்டியது கட்டாயமானது எனவும் அவர் கூறியுள்ளார்.

# சிங்கராஜ வனத்துக்கு அருகிலுள்ள காணிகளை அரசுடைமையாக்க முடிவு!

சிங்கராஜ வனப்பகுதியைச் சுற்றியுள்ள தனியாருக்குச் சொந்தமான நிலங்களை, விரைவில் அரசாங்கம் பொறுப்பேற்கவுள்ளது.

வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த எதிரிசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான சுமார் 400 ஹெக்டேயர் நிலங்கள் உள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நிலப்பகுதி காடாக இருந்த போதிலும், தனியார் நிலப்பரப்பாக காணப்படுவதால் அதில் இடம்பெறும் காடழிப்பைத் தடுப்பதற்கு வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ், வனப் பாதுகாப்பு திணைக்களத்துக்கு எவ்வித அதிகாரமும் இல்லையெனவும் அவர் கூறியுள்ளார்.

குறித்த காணிகளைக் கையகப்படுத்துவதன் ஊடாக சிங்கராஜ வனப் பகுதியின் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தொல்லியல் திணைக்களத்தால் கிளிநொச்சியில் குறிவைக்கப்படும் மற்றுமொரு சிவன் ஆலயம்!

கிளிநொச்சியில் அமைந்துள்ள உருத்திரபுரீச்சரம் சிவனாலய வளாகத்தில் தொல்பொருள் ஆய்வுக்குரிய ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

அதன்படி எதிர்வரும் 23 ஆம் திகதி குறித்த பகுதியில் அகழ்வாராச்சி இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த கோவில் வளாகம் நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) துப்புரவு செய்யப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த கோவில் அமைந்துள்ள வளாகத்தில் பௌத்த சின்னங்கள் காணப்படுகின்றன என ஏற்கனவே தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் குருந்தூர் மலை விவகாரத்தின் பின்னர் குறித்த பகுதிக்கு பௌத்த துறவி ஒருவரும், பொலிஸாரும் சென்று பார்வையிட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் குறித்த பகுதியில் எதிர்வரும் 23 ஆம் திகதி அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# 2 கிலோ ஹெரோயினுடன் ராஜகிரியவில் ஒருவர் கைது!

கொழும்பு, ராஜகிரிய பகுதியில் 2 கிலோ கிராம் ஹெரோயினுடன் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடைப் படையினரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

40 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் ஆவார்.

கைதான சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந் நிலையில் சந்தேக நபரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ள பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agri culture Information

## சேதன விவசாயத்தில் எவ்வாறு பீடைகளைக் கட்டுப்படுத்தலாம்...?

1) பாதுகாப்புப் பயிர்களை நடல்.
2) தொடர்ச்சியாகப் பயிர்களை மாற்றுதல்.
3) பல்லின (Mixed cros)ப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளல்.
4) பல் வகையான மண் உயிரினங்களைப் பாதுகாப்பதோடு சூழலுக்கு நன்மைபயக்கும். (பூச்சிகளினதும், பறவைகளினதும் உதவியால் பீடைகளை ஒழித்தல்)
5) பீடைக்கட்டுப்பாட்டு முறை தோல்வியடையும் போது இரைகௌவிகளின் பாவனை மூலம் அவை பரம்பலடைவதைத் தடுத்தல்.
6) பொறி அல்லது தடைகளைப் பாவித்தல்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

# திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி கோவில்

## கொடியேற்றம் - 18.03.2021





# பத்திரகாளி அம்பாள் பாதாதி கேசத் துதி



- சந்திரசேகரம்பிள்ளை ஜெயச்சந்திரன் -

**துடியிடை துலங்கக் கண்டேன்**
**துரியநல் லியல்பு கண்டேன்**
**கொடியிடை அழகு கண்டேன்**
**மின்னிடை மிளிரக் கண்டேன்**
**படிமிசை வடிவு கொண்டு**
**பக்தர்க் கிரங்கி வந்து**
**கடிதெனக் கருணை செய்யும்**
**காளிநின் வடிவம் கண்டேன்!**

**கலீர்கலீரென மேகலை அசைந்திட**
**பளீர்பளீரென மின்னொளி தோன்றிட**
**மெல்லெனவந்தென்னுள்ளத்துஒளிர்வாய்**
**உயர்ஞானச் சுடரே அமுதே**
**நல்லதொரு பூரணை நிலவே**
**நம்பினவர் நலமே தவமே**
**வல்லதொரு பொருளே வளமார்**
**திருக்கோண மலைவாழ் இறையே!**

**தோள்கண்டேன் மார்பினில் மின்னிடும்**
**பொற்கபாடம் கண்டேன் பொன்னிகர்**
**தோளிடம்சேர் பூந்துகில் மிளிர**
**தொடைபலவும் பொலியக் கண்டேன்**
**வாளெனகண் மடவா ரணிந்திடும்**
**பொற்றாலியும் மரகத மாமணி**
**தாள்வடமாலை தொங்கிடும் அழகும்**
**நான்செய் பெருந்தவத்தால் கண்டேன்!**

**கண்கவர் காட்சி கண்டேன்**
**கருத்தினிற் பதியக் கண்டேன்**
**விண்ணவர் வணங்கக் கண்டேன்**
**விரைந்தொன்று கூடக் கண்டேன்**
**பெண்ணவள் மார்ப கத்தே**
**பொங்கிடும் வீரம் கண்டேன்**
**பண்புடன் வணங்கி நானும்**
**பாவைக் கடிமை யானேன்**

**சந்திர வதனம் கண்டேன்**
**மின்னிடும் நுதலும் கண்டேன்**
**மந்திர வடிவு கொண்டு**
**மங்கையென் முன்னே நிற்க**
**சிந்துர நிறத்தை யொத்த**
**குங்குமம் பொலியக் கண்டேன்**
**வந்தனம் கூறியே வாழ்த்துவன்**
**பத்ர காளி யுன்னை!**

# மானுட மேம்பாட்டுக்கு அம்பாள் அருள்பாலிப்பாள்



வேதாகமாமணி
சிவஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள்
(ஆதீனகர்த்தா, திருகோணமலை பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்)

மக்கள் அவலம் போக்கி, சுபீட்சம் நல்கிக் காத்தருள்வாள் எங்கள் அன்னையாம் பத்திரகாளித் தாய்.

காளிவழிபாடு என்ற சக்தி வழிபாடு இந்து மதத்தின் ஒரு முக்கியமான பகுதி என்பதற்கு மகாபாரதமும், புராணங்களும், ஆகமங்களும் சான்று தருகின்றன. பிற்காலத்தில் சமரசப் பெருஞானியாக விளங்கிய ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரும்,மகாகவி சுப்ரமணிய பாரதியாரும் காளி வழிபாடு செய்தவர்களே.

தெய்வ வழிபாட்டிலே தேவிவழிபாடு மிக மிகத் தொன்மையானதென்பர். பண்டைய உலகத்தின் முக்கிய தேவதையான தேவி (சக்தி) இருக்குவேத காலத்திற்கும் முற்பட்ட தெய்வம் என்பது மொகஞ்சதாரோ என்னும் இடத்தைத் தொல்பொருளியலாளர்கள் அகழ்வாராய்ச்சி செய்து பார்த்தபோது கிடைத்த மிகப்பழைய நாகரீகச் சின்னங்களான நாணயங்களிலிருந்து தெரிய வருகின்றது. 17 ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் வாழ்ந்த தாயுமான சுவாமிகள் - அகிலாண்ட கோடீயீன்ற அன்னையே பின்னையும் கன்னியென மறைபேசும் ஆனந்தரூப மயிலே - என்று பாடியிருப்பது சிந்திக்கத்தக்கது.

இத்தகு மாண்புமிகு காளிவழிபாடு நிகழும் திருகோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் இவ்வாண்டு மகோற்சவத்தையொட்டி அம்பாள் புகழ்கூறும் இம்மலரை வெளியிடுகின்றார் அம்பாள் பக்தரான அதன் ஆசிரியர் நடேசபிள்ளை வித்தியாதரன். அவர் பெற்றோரும் அம்பாள் பக்தர்கள். திருகோணமலை பத்திரகாளி அம்பாள் அவர்தம் குலதெய்வம். அவருக்கும், அவர் குடும்பத்தினருக்கும், அம்பாள்பற்றிய ஆக்கங்களை வரைந்துள்ள எழுத்தாளர்களுக்கும் அம்பாள் அருள்பாலிப்பாள்.

இன்று பாரெங்கும் பரந்துவாழும் மக்களை, அவர்கள் முகங்கொடுக்கும் கொவிட் - 19 நோயிலிருந்து, அவலத்திலிருந்து காக்குமாறும், பாரில் சுபீட்சம், அமைதி நிலவ, அன்னையை இறைஞ்சி வேண்டுகின்றோம்.


# திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி கோவில்

## கொடியேற்றம் - 18.03.2021



## கூப்பிட்டழைக்கக் குறைதீர்ப்பாள் காளி

கழகப்புலவர்
பெ.பொ.சிவசேகரனார்



பத்திரத்தை ஏந்திப் படியில் விளையாடும்
உத்தமியாள் காளி உபாசகரின் - புத்தியிலே
நின்று நடம்புரிவாள் நெஞ்சத்தில் சித்திரமாய்
என்றும் ஒளிர்வாய் இருந்து!

முத்தியும் வாழ்வு மளித்திடுவாள்முடை தீர்த்திடுவாள்
புத்தியும் ஞானமுந் தந்திடுவாள் வினைபோக்கிடுவாள்
இத்தரை மீதினில் எண்ணியயாவையு மெய்துவிப்பாள்
பத்திர காளித்தா யின்பதம்போற்றிப் பணிமின்களே!

நீறணி மேனியன் நெற்றிக்கண் கொண்ட நிமலனைத்தன்
பேறெனக் கொண்ட பெருமாட்டி கோணைப் பெருநிலத்தில்
வீறுகொண் டெட்டுத் திசைகளுந் தன்பேர் விளக்கிநிற்கும்
மாறிலாக் காளி மனம்வைத்தால் துன்பம் மறைந்திடுமே!

வேப்பங் குழைக்கொத்தும் வெள்ளிப் பிரம்பும் விளங்குகையில்
காப்பு மணிந்து கடைக்காற் சிலம்பு கலகலென
மூப்பும் பிணியுமுடையார் பணிந்து முறையிடுவார்
கூப்பிட் டழைக்கக் குறைதீர்ப்பாள் காளி குலதெய்வமே!

தீராப் பிணியாவுந் தீர்த்திடு வாள்வெய்ய தீவினைகள்
வாராமல் வந்தெம்மைக் காத்திடுவா ளெங்கள் வாழ்வினிலே
போராடு மைம்புலக் கொற்ற மடங்கப் பொசுக்கிடுவாள்
சீராரும் பத்திரகாளிப் பெருமாட்டி செய்திறமே!

அள்ளிக் கொடுப்பாள் அடியார் மிடிகள் அகன்றிடவே
துள்ளிக் குதிப்பாள் பகைஞர் நடுங்கத் துடியடிப்பாள்
வெள்ளிப் பிரம்பை விசுக்குவாள் சூலத்தை வீசிநிற்பாள்
கள்ளக் கபடர் வெருண்டோடப் பத்திர காளிகையே!

காளி யருண்டேல் கண்ணில் ஒளியுண்டாம் கஞ்சமலர்த்
தாளி னருளுண்டேல் தானியப் பேறுண்டாம் தங்கமுண்டாம்
கோளின் குறைநீங்கிக் கொற்றமுண்டாம் நற்குணமு முண்டாம்
வாளி பிடித்திட்ட வல்லபை நாமத்தில் வாழுமினொ!

னவில் அவள்செய்யுங் காரியம் ஒன்றல்லக் கண்ணுறங்காள்
னமும் அவள்போகுந் தேசம்பலவாகுந் தேடிச் செல்வாள்
னதில் விளையாடும்மாதா அவளேகாண் மாமலையாம்
புனித பதியாளைப் பத்திரகாளியைப் போற்றுதுமே!

## பத்ரகாளித் தாயே பள்ளி எழுந்தருளே!



(சைவப்புலவர்
இ.வடிவேல்)

பூதங்கள் ஐந்தையும் புனர்ப்பவள் நீயே!
புவனங்கள் அனைத்தையும் புரப்பவள் நீயே!
வேதங்க ளோதிடும் விமலையும் நீயே!
விளங்கு மாமந்திர சொரூபியும் நீயே!
நாதங்களும் நாத கீதமும் நீயே!
நாதாந்த மாகிய நாயகி நீயே!
கோதிவாத திருக்கோணையம் பதியமர்
ஆதிபத்ர காளியே பள்ளி எழுந்தருளே!

ஓங்காரத் துள்ளே உதிப்பவள் நீயே!
ஓங்காரப் பொருளை உரைப்பவள் நீயே!
இரீங்காரத் துள்ளே இனிப்பவள் நீயே!
இரீங்கார பீஜமாய் இருப்பவள் நீயே!
ஆங்காரி யாகியே ஐந்தொழில் புரிந்திட
அதிகார சக்தியை அருள்பவள் நீயே
பாங்காகஉன்னடியைப் பணிந்திட வந்தோம்
பத்ரகாளித் தாயே பள்ளி எழுந்தருளே!

புனிமதி மணியோடு பைந்தழை முடியிடை
அணிபெறச் சூடிய ஆதிபரா பரனைக்
கனியோடு சுவையெனக் கலந்திடும் தேவியே
கருணையோ டுயிர்களைக் காத்திடுந் தாயே
அணிபெறு கோணையம் பதியில் அமர்ந்த
அன்னையே அருள்மொழி அமிர்த வல்லியே
பனிமலர் தூவியுன் பாதமலர் தொழுதோம்
பத்ரகாளித் தாயே பள்ளி எழுந்தருளே!

## அடியார்க்கு அருள்சுரக்கும் அன்னை பத்திரகாளி

து.குலவீரசிங்கம்
(தலைவர், சத்திய சாயி நிலையம்,
திருகோணமலை)



தென்கையிலைத் திருப்பதி என்று போற்றப்படும் திருகோணாசலத்தில் மாதுமை அம்பாள் சமேதராக வீற்றிருந்து கோணேஸ்வரப் பெருமான் அருளாட்சி செய்ய, அத்திருத்தலத்தை நோக்கியவாறு திருகோணமலை நகரமத்தியில் அருட்பொலிவோடு கம்பீரமாகக் காட்சியளிப்பது பத்திரகாளி அம்பாள் திருக்கோயில்.

கடினமான கல்லை மிகசூட்சுமமான தெய்வீக அதிர்வலைகளை உருவாக்கக் கூடிய திருவுருவங்களாக்கி, ஆகம விதிப்படி அவற்றைப் பிரதிட்டை செய்தும் அத்துடன் பல தத்துவங்களை உள்ளடக்கியும் உருவாக்கப்பட்டவையே திருக்கோவில்கள். இவை, மனிதன் அக, புறத் தூய்மையுடன் சில நிமிடங்கள் அங்கு அமைதியாக அமர்ந்திருந்து அந்த அதிர்வலைகளை உள்வாங்கித்தன் ஜீவசக்தியை மேம்படுத்தவே அமைக்கப்பட்டன எனக் கூறப்படுகிறது.

அண்ட சாரசரங்கள் அனைத்தையும் இயங்க வைப்பது ஒரே சக்தி என்று விஞ்ஞானம் கூறிய போதிலும் அதில் ஆணுக்குரிய சக்கியும் (masculine energy) பெண்ணுக்குரிய சக்தியும் (feminine energy) உள்ளதாக நம்முடைய சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதை விளக்குவதே அர்த்தநாரீஸ்வரத் திருவுருவம். ஆணுக்குரிய சக்தியின் அம்சங்களாக ஆக்கிரமிப்பு உணர்வு, பயன்படுத்தல் ஆகியவை குறிப்பிடப்படுவதோடு பெண்ணுக்குரிய சக்தியாக அன்பு, கலை, அழகியல் ஆகியவை கூறப்படுகின்றன. சிருஷ்டியில் காணப்படும் இவ்விரு சக்திகளும் ஒவ்வொரு மனிதரிடமும் உள்ளன என்றும், ஆனால் அவற்றின் விகிதாசாரம் வேறுபட்டதாகக் காணப்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

சக்தி வழிபாடு மிகவும் தொன்மையானது. 3 ஆம், 4 ஆம்நூற்றாண்டுகளில் இருந்து 12 ஆம் நூற்றாண்டுவரை சக்தி வழிபாடு பிரபல்யம் பெற்றிருந்ததாகவும், முதலாவது சக்திபீடம் இந்தியாவிலுள்ள ஒரிஸ்ஸா மாநிலத்தில் அமைந்திருந்த தாகவும், அங்கு பத்திரகாளி வழிபாடு இருந்ததாகவும் Dr.Soma Chand என்பவரின் ஆய்வு மூலம் தெரியவருகிறது. ஆரம்ப காலத்தில் அநேகமான சக்தியின் வதம்செய்யும் பாங்கிலான திருவுருவங்கள் வழிபடப்பட்டன எனவும், பின்னர் தேவி சாந்த சொரூபியாகவும், கலைகளுக்கு அரசியாகவும், கருணையே உருவான தாயாகவும் வழிபாடு மாற்றமடைந்ததாகவும் கூறப்படுகின்றது. மனித வாழ்வை வளப்படுத்தும் ஜீவ நதிகளையும் அன்னையின் பெயர் சூட்டி வழிபட்டு வருவதும் நாமறிந்ததே.

திருகோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலயம் பெண்களிடையே பக்தியை வளர்க்கும் ஒரு புனித தலமாக இருந்து வருகிறது. நவராத்திரி, கௌரிகாப்பு, திருவிளக்குப் பூஜை போன்ற சமய வைபவங்களில் கலந்து கொள்ளும்ஏராளமான பெண்களே இதற்கு சான்றாவார்.

சீரான ஆலய நிர்வாகம் இக்கோவிலுக்கு பக்தர்களை ஈர்த்து அவர்களுக்கு அம்பாளின் அருளை அனுபவிக்க வாய்ப்புத் தருகிறது.

திருகோணமலை இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் இத்திருக்கோயில் இருப்பதால், பாடசாலை செல்லுமுன் பத்திரகாளி அம்பாளை வணங்கிச் செல்லும் பெரும்பேறு கிடைத்தது. ஆனால் அந்த வணக்கம் ஓரளவு பயத்துடன் கூடியதாகவும் இருந்தது. காரணம் கேள்விப்பட்டிருந்த சில கர்ணபரம்பரைக் கதைகளே.

2017.02.06 இல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு, அருட்பொலிவோடு தெய்வீக அதிர்வலைகளைப் பிரவகித்துக் கொண்டிருக்கும் அன்னை பத்திரகாளி இம்மண்ணில் வாழும் அனைவருக்கும் சுகத்தையும், சமாதானத்தையும், சுபீட்சத்தையும் வழங்கி ஆசிர்வதிக்க வேண்டுமென்று அவரது திருவடிகளைப் பணிவோடும் பக்தியோடும் வேண்டுவோம்.

**லோகா சமஸ்தா ஸுகினோ பவந்து!**



காலைக்கதிர் Kalaikkathir

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கடந்த 27 ஆண்டுகளாகத் தொடர்ந்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்து வருகின்றார். பத்தாண்டுகளுக்கு மேல் அமைச்சராக இருக்கின்றார். ஓர் ஆயுதப் போராளியாக களத்தில் இறங்கிய அவரின் கடந்த காலத்தை ஓர் அரசியல் அவதானியாக நோக்குகின்றார் சட்டத்தரணி செ. ரவீந்திரன். பல பழைய சம்பவங்களையும், நிகழ்வுகளையும் அவர் அசை போடுகின்றார். சில தினங்களுக்கு இக்கட்டுரை தொடராக வெளிவரும்.**

**இது பற்றிய வாசகர்களின் அவதானிப்பு, பிரதிபலிப்பு கருத்துத் தெரிவிப்பு ஆகியவற்றை கட்டுரையின் இறுதியில் பிரசுரிக்கலாம் எனக் கருதுகிறோம்.**

**வாசகர்கள் சுதந்திரமாகத் தமது கருத்துக்களை முன் வைக்கலாம்.**

**- ஆசிரியர் -**



# சாணக்கியத்தை இழந்து இணங்கிய அரசியலில் டக்ளஸின் வகிபாகம்

## ஒரு நடுநிலைப் பார்வை


சட்டத்தரணி செ. ரவீந்திரன்
(ஆஸ்திரேலியா)

## அங்கம் 02

டக்ளஸ் தேவானந்தாவைப் பற்றி மேலும் குறிப்பிட அவருக்கு உந்து சக்திகளாகவோ முன்னோடிகளாகவோ அவரது வாஞ்சையில் இருந்த ஒன்றிரண்டு பேரை குறிப்பிடவேண்டும்.

ஒருவர் (அமரர்) கே.சி.நித்தியானந்தா. சுருக்கமாக நித்தி என்று எல்லோராலும் அழைக்கப்பட்டவர். இலங்கை அரசசேவையில் சாதாரண லிகிதராக (Clerk) இணைந்து, படிப்படியாக நிர்வாக சேவைகளுக்கு உயர்ந்து இளைப்பாறியவர்.

இடது சாரிக் கொள்கைகளால் கவரப்பட்டு, அவற்றை கடைப்பிடித்து, சேவையாற்றிய காலங்களில் பொது எழுதுவினைஞர் சங்கத்தில் பதவிகள் வகித்து, அதன் தலைவராக பல காலம் பணியாற்றினார். இடதுசாரித்



கே.சி.நித்தியானந்தா

**செய்திகள்தான் அரசியலுக்கு முக்கியம் – சாணக்கியர் அன்று சொன்னது !**
**நேற்றைய செய்திதான் நாளைய வரலாறு ஊடகங்கள் இன்று சொல்வது !**

தலைவர்களான டாக்டர் என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர். டி . சில்வா, பீட்டர் கெனமன், டாக்டர் எஸ்.ஏ.விக்கிரம சிங்கா, பாலா தம்பு, ரி.பி.இலங்கரத்னா ஆகியோருடன் நெருங்கிப் பழகியவர்.

டி.யூ.குணசேகராவை கம்யூனிஸ்ட் கட்சியில் வளர்த்ததே இவர்தான். அதனால், இலங்கை அரசியலில் பொது எழுதுவினைஞர் சேவை சங்கத்தின் மூலம் எல்லோராலும் அறியப்பட்டவரானார்.

நித்தியின் ஆளுமையால், எழுதுவினைஞர் சங்கம் போராட்ட களத்தில் குதிக்க நினைத்தால் ஏனைய தொழிற் சங்கங்கள் பலவும் ஆதரவு தந்து நாட்டை முடக்கும் நிலைவரும் என்று அவர்களின் கோரிக்கைகள் பல அரசாங்க தலைவர்களால் சுமுகமாக தீர்க்கப்படுவது உண்டு.

1970 இன் முற்பகுதியில் இடதுசாரிகளிடையே வளர்ந்த தர்க்க ரீதியான வேறுபாடுகளும் அவற்றின் தாக்கங்களும், அவர்களைப் பிளவுபடுத்தவும், அதன் விளைவாக இனரீதியான ஓரங்கட்டலும் அவர்களிடையே தொடர்ந்தது.

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டாக்டர் விக்கிரம சிங்காவின் பொறுப்பில் ரோகண விஜேவீர, பற்றிக் லுமும்பா ( Patrick Lumumba) பல்கலைக்கழகத்திற்கு மருத்துவம் படிக்க அனுப்பப்பட்டார். ரோகண விஜேவீர கம்யூனிஸ்ட் தத்துவங்களால் கவரப்பட்டமையால் ரஷ்ய அரசு அவரை தங்கள் அனுசரணையில் கற்பிக்க வழி வகுத்தது.

ஆனால், விஜேவீர அங்கு சென்ற சமயம் இலங்கையில் கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாகப் பிரிந்து, ஒன்று என். சண்முகதாசன் தலைமையில் சீன சார்பாக இயங்கியது. சண்முகதாசனுக்குச் சார்பாக ரோகண விஜேவீர செயல்படுகிறார் என்ற குற்றச்சாட்டில் அவரது கற்கைநெறி முடியுமுன்னரே அவர் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். அவர் இலங்கை வந்ததும் சண்முகதாசனையும் புறந்தள்ளி, முதலாளி வர்க்க அரசாங்கங்கள் மேல் வெறுப்பும் கோபமும் கொண்டிருந்த சிங்கள இளைஞர்களை ஊக்குவித்து, 1971 இல் ஏப்ரலில் கிளர்ச்சியை நடத்தினார்.

சிறிமாவின் ஆட்சியில் இந்தக் கிளர்ச்சி இந்தியாவின் உதவியோடு ஈவிரக்கமில்லாமல் அடக்கப்பட்டு, பல சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

நடந்த இரத்தக் களரியைப் பார்த்து இடதுசாரிகள் அதிர்ந்து போனாலும், அவர்கள் கண்டும் காணாதது போலிருந்து விட்டார்கள்.

ரோகண விஜேவீர சிறையிலிருந்தார். அவர் வழி வந்த சிங்கள இளைஞர்களே இடதுசாரிக் கொள்கைகளை முன்னெடுத்தனர்.

இந்திய விஸ்தரிப்புவாதத்தை தமிழரின் ஊடாக இந்த நாட்டிற்குள் ஊடுருவ விடக் கூடாது, சிங்கள – தமிழ் மக்கள் இணைந்த இடதுசாரி ஆட்சியே இனவொற்றுமைக்கு வழி என்பது அவர்களின் பலமான சித்தாந்தங்களில் ஒன்றாய் அமைந்தது.

பாரம்பரிய இடதுசாரிகளான டாக்டர் என்.எம்.பெரேரா, கொல்வின், ஆர்.டி.சில்வா போன்றோர் தலைமை தாங்கிய சமசமாஜக் கட்சி (L.S.S.P.) நாட்டில் சிங்களமும் தமிழும் ஆட்சிமொழியாக இருந்தால் ஒரு நாடு, ஆனால் சிங்களம் மட்டும் அரச கருமமொழியானால் இரண்டு நாடுகளாகும் என்று 1956 இல் இருந்தே பேசி வந்தவர்கள்.

இதனை கம்யூனிஸ்ட் கட்சியும் ஆதரித்தது. வளரும் ஜே.வி.பியின் தாக்கத்தாலும், சீனப் பகுதியின் வளர்ச்சியினாலும், தங்களது எதிர்காலம் கேள்விக்குறியாகிறது என்ற பயத்தில் இந்த இருமொழி கொள்கைகளெல்லாவற்றையும் காற்றில் பறக்க விட்டு, அவர்கள் இனவாதத்தில் ஊறியிருந்த சிறிமாவின் ஆட்சியை அரவணைத்து, மந்திரிகளாகினர்.

அதே கொல்வின் ஆர்.டி.சில்வாவே சிங்களம் மட்டுமே அரச கருமமொழி என்று 1972 ஆண்டின் புதிய அரசமைப்பை தமிழரை புறந்தள்ளி நிறைவேற்றினார்.

இவற்றினால் அவர்களை நம்பியிருந்த – இணைந்தியங்கிய – தமிழர்கள் ஏமாற்றமும் விரக்தியும் அடைந்து ஒதுங்கினார்கள், ஒதுக்கவும்பட்டார்கள்.

இவர்களில் முதன்மையானவர் தொழிற்சங்கவாதி நித்தியானந்தா. தொழிற் சங்கங்களையும் இடதுசாரி தத்துவங்களையும் இனப்பாகுபாடே இனி நிர்வாகிக்கும் என்றும், எந்த அனுசரணை அரசியலும் இந்த நியதியை மாற்றப்போவதில்லை என்றும் தனது அனுபவத்தாலேயே உணர்ந்தார்.

அந்த உணர்வுகளால் இன ரீதியாக தமிழ் எழுதுவினைஞர் சங்கத்தை தோற்றுவித்து அதனோடு இயங்கினார். கோடீஸ்வரன் அதன் தலைவரானார். பாலசுப்பிரமணியம் காரியதரிசியானார். தமிழர் சிங்களம் படித்தால்தான் சேவையில் பதவி, சம்பள உயர்வு என்ற சட்டத்தை எதிர்த்து கோடீஸ்வரனூடாக சங்கம் வழக்காடி வெற்றி அடைந்தது.

பாலசுப்பிரமணியம் பின்னாளில் திருச்செல்வம் அமைச்சரானபோது அவரின் காரியதரிசியாகப் பணியாற்றியவர்.

தமிழ் எழுதுவினைஞர் சங்கப் பிரதிநிதிகள் 676,காலி வீதி, கொள்ளுப்பிட்டியில் ஒரு காரியாலயம் வைத்திருந்தனர். அங்கு நித்தி பெருமளவு நேரம் சென்று ஆலோசனைகளும் ஒத்தாசைகளும் கொடுப்பது வழக்கம். அங்கு தமிழ் அரசியல் தலைவர்களும், முகவர்களும், கொழும்பு தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்களும் ஊடாடினர்.

தமிழர்களுக்காக, நியாயமாக நடப்பார்கள் என்று எதிர்பார்த்த இடதுசாரிக் கட்சிகளின் போக்கினால் நித்தி பலமாக நிலைகுலைந்திருந்த அதே சமயம், உணர்ச்சியை மாத்திரமே ஊட்டி எந்த விதமான அடிப்படை திட்டங்களும் இல்லாமல் வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்படுவது பற்றி தமிழ் அரசியல் தலைவர்களோடு அவர் கவலைப்பட்டார்.

இவற்றினால் வரக்கூடிய பிரளயங்கள் பற்றியும், எங்களது அவசரங்களாலும், அரசியல் ஆதாயத்துக்கு சுலோகங்கள் தேடியதனாலும், அவற்றின் விளைவுகள் மோசமாக இருக்கலாம் என்பதைத்தான் அனுபவபூர்வமாகத் தெரிந்து கொண்டதிலிருந்து கருத்துச் சொன்னார்.

ஆனால், எங்களது தமிழ் அரசியல் தலைவர்களின் தெரிவுகள் அவரது அந்தக் கருத்துக்களில் தங்கியிருக்கவில்லை.

வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதுவே தொடர்ந்த அரசியலுக்கு அடிப்படையானது. அரசியல் ரீதியாக நாடு இரண்டாகப் பிரிந்தது. வடக்கிலும், கிழக்கிலும், தமிழர் விடுதலைக் கூட்டணி அமோக வெற்றிபெற்று தங்களுக்கு, தனி நாட்டுக்கு அதிகாரம் கிடைத்து விட்டது என்று பெருமை பேசினார்கள்.

ஏனைய பகுதிகளில் சிறிமாவோவின் கட்சியும் இடதுசாரிக்கட்சிகளும் தோற்கடிக்கப்பட்டு, ஜே.ஆர். பெரும்பான்மையுடன் தெரிவானார்.

ஜே.ஆரோடு, தொழிற்சங்க ரீதியாக இருந்த அனுபவங்களினால், சிங்கள, தமிழ் அரசியல் நிலைமைகள் எப்படி போகுமென்று தெளிவாக நித்தி ஊகித்தார்.

1977 ஆம் ஆண்டின் தேர்தல் வெற்றியைக் கொண்டாடப் படிப்படியாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியினைத் தாக்குவதிலும், அவர்களது உடைமைகளை சூறையாடுவதிலும் ஜே.ஆர். ஆதரவுத் தரப்புகள் முன்னேறின. பொலிஸ் பாராமுகமாக இருந்தது.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களுக்கு, அவர்கள் கேட்ட தமிழீழத்திற்குக் கிடைத்த வெற்றிக்குப் பாடம் கற்பிக்கப் பொலிஸார் வன்முறையை கையிலெடுத்தனர். பொலிஸாரின் அடாவடித்தனத்துக்கு எதிராகக் தமிழர் தரப்பு குரலெழும்பியது. அதனைத் தமிழர்களுக்கு எதிராகவே திருப்பிவிடும் கைங்கரியத்தை ஜே.ஆர். தனது பேச்சுக்களால் முடுக்கிவிட்டார்.

(11ஆம் பக்கம் பார்க்க)



இன்று சர்வதேச மீள்சுழற்சி நாள்

# திண்மக்கழிவுப் பொருள்கள் வளமாகும் தருணம்

நாம் வாழும் புவியில் வளங்களுக்கான தேவை அதிகரிக்கும் அதேவேளை கழிவுப் பொருள்களின் உருவாக்கமும் கடுகதியில் இடம்பெறுகின்றது. இதன் பிரதிபலிப்பு யாதெனில், உருவாகும் திண்மக்கழிவுப் பொருள்களை மூல வளங்களாக பயன்படுத்தும் மார்க்கத்தை கண்டறியும் தேவை உண்டாகியுள்ளது.

2021 ஆம் ஆண்டிற்கான சர்வதேச மீள்சுழற்சி நாள் மார்ச் மாதம் 18ஆம் நாள் 'மீள்சுழற்சி நாயகர்கள்' (Recycling Heroes)' எனும் தொனிப்பொருளில் கொண்டாடப்படுகின்றது.

**திண்மக்கழிவுப் பொருள்களின் பின்னணி**

விரைவான நகரமயமாக்கல் மற்றும் அதிகரித்துவரும் மக்கள்தொகை வளர்ச்சி ஏற்படுகின்ற இக்காலத்தில் திண்மக் கழிவு முகாமைத்துவம் என்பது நிலபேண்தகு தன்மை, சுகாதாரம் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய நகரங்கள் மற்றும் சமூகங்களுக்கான ஒரு முக்கியமான காலத்தின் தேவையாகும் .

உலகலாவிய ரீதியில் ஆண்டுதோறும் 2 00 கோடி தொன் நகராட்சி திண்மக் கழிவுகள் உருவாகின்றன . அடுத்த 30 ஆண்டுகளில் உலகளாவிய கழிவு உற்பத்தி 70 வீதத்தால் அதிகரிக்கும். தெற்காசியாவிலும் திண்மக்கழிவு உருவாக்கப்படும் வீதம் மிக வேகமாக அதிகரித்து வருகிறது. இலங்கை போன்ற குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் 90 வீதத்துக்கும் அதிகமான திண்மக் கழிவுகள் தவறாக நிர்வகிக்கப்படுகின்றன. இந்த திண்மக்கழிவுகள் திறந்த வெளிகளில் கொட்டப்படுகின்றன அல்லது எரிக்கப்படுகின்றன.

சர்வதேச மதிப்பாய்வுகளின்படி சராசரியாக நாளொன்றுக்கு நபரொருவர் 4.9 பவுண்டுகள் (இறாத்தல்கள்) திண்மக் கழிவுப் பொருள்களை உருவாக்குகின்றார். இப் பொருள்களில் பெரிதும் காணப்படுவது போத்தல்கள்,இலத்திரனியல் கழிவுகள், நெகிழிக் கழிவுகள் (plastic), உயிர்ச்சிதைவடையக்கூடிய கழிவுகள் மற்றும் உயிர்ச்சிதைவடையாத கழிவுகள் (சேதனக் கழிவுகள்) ஆகும்.

முறையற்ற திண்மக்கழிவுகளால் ஏற்படும் பொதுவான பாதிப்புகள் பின்வருமாறு:-

**1.சமுத்திரங்ளை மாசுபடுத்துகிறது.**



**2.வடிகால் அடைப்பதன் மூலம் வெள்ளஅபாயத்தை ஏற்படுத்துகிறது. (இதனை கடந்த மழைக்காலத்தில் யாழ் நகரத்தில் ஏற்பட்ட வெள்ள**



**அனர்த்தத்தின் மூலம் அனைவரும் உணர்ந்து கொண்டோம்.)**

**3. விலங்குகள் அறியாமல் திண்மக்கழிவுகளை உட்கொள்வதால் ஏற்படும் உயிராபத்துகள்.**



**4. நோய்க்காவிகளின் இனப் பெருக்கம் மூலம் நோய்களை பரப்புகிறது.**

**5. கழிவுகளை எரிப்பதில் இருந்து உருவாகும் காற்று வழி துகள்கள் மூலம் சுவாசம் சம்பந்தமான பிரச்சி**



**னைகள் அதிகரிக்கும்.**

**6. திண்மக்கழிவினால் சுற்றுலாத்துறை பாதிக்கப்படுகின்றது.**



**இதனால் நாட்டின் பொருளாதாரம் பாதிப் படையும்.**

இந்த அபாயங்களில் இருந்து விலகுவதற்கு வினைத்திறனான திண்மக்கழிவு முகாமைத்துவம் தேவை. இதனை நடைமுறைப்படுத்துவதற்கு சிறந்த நடத்தை சார் மனோநிலை அவசியமானது.

வினைத்திறனான திண்மக்கழிவு முகாமைத்துவத்துக்கு மூன்று பிரதான அணுகு முறைகள் (3R concept) உள்ளன. அவையாவன:-பாவனையைக் குறைத்தல்,மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி.

திண்மக் கழிவு அணுகுமுறையின் வரிசைமுறையினை ஒரு தலைகீழான பிரமிட் மூலம் விவரிக்கலாம்.


இதில் மீள்சுழற்சி முறையானது சூழல் நேயமானதும் பொருளாதாரரீதியில் மிகவும் முக்கியத்துவமானதும் ஆகும்

**மீள் சுழற்சி முறை**

இம் முறை வீசப்படும் கழிவுப் பொருள்களை சேகரித்து பின் அவற்றை முறையாகப் பரிகரித்து புதிய பாவனைக்கு உகந்த பொருள்களாக மாற்றுதல் ஆகும். இது நமது சமுதாயத்திற்கும் சூழலுக்கும் நன்மை பயக்கும்.

மீள்சுழற்சியினால் ஏற்படும் நன்மைகள்:-

1.நிரப்புகைகள் மற்றும் எரியூட்டிகளுக்கு அனுப்பப்படும் கழிவுகளின் அள




வைக் குறைக்கின்றது.

2. நீர் மற்றும் கனிமங்கள் போன்ற இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படுகின்றன.

3. வளங்களை மீளப்பயன்படுத்துவதால் பொருளாதார பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றது.

4. சூழல் மாசடைவைக் குறைக்கும்.

5.சக்திப் பாதுகாப்பு.

6. உற்பத்தித்துறையை பாதுகாத்தல்.

7. உற்பத்தி மற்றும் மீள்சுழற்சி துறைகளில் புதிய தொழில் வாய்ப்புகள்.

மீள்சுழற்சியின் அடிப்படை படிமுறைகள்:-

அடிப்படையில் தொடரும் தடம் முறையில் (continuous loop) மூன்று படிகளைக் கொண்டுள்ளது.

1. சேகரிப்பு மற்றும் பரிகரித்தல் (collection & processing)

மீள்சுழற்றக் கூடிய பொருள்கள் பிரத்தியேக சேகரிப்பு மையங்கள் மற்றும் மீள்வைப்புச் செய்யும் திட்டங்கள் மூலம் சேகரிக்கப்படுகின்றன. பின்னர் கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு சுத்தம் செய்யப்படுகின்றன. இவை ஈற்றில் உற்பத்தி மூலப் பொருள்களாக பயன்படுத்தப்படுகின்றன.

2. உற்பத்தி

மீள்சுழற்சி செய்யப்பட்ட உள்ளடக்கங்களைக் கொண்ட பல பாவனைப் பொருள்கள் உருவாக்கப்படுகின்றன.

உதாரணமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:-

செய்தித்தாள்கள் மற்றும் காகிதத் துடைப் பான்கள்

அலுமினியம், நெகிழி (plastic) மற்றும் கண்ணாடி மென்பானக் கொள்கலன்கள்

உருக்கிலான கொள்கலன்கள்

சலவைத் தூள் கொள்கலன்கள்

பூங்கா இருக்கைகள்

தாா்ப் பாதைகள்

3. மீள்சுழற்சி சார் உற்பத்திப் பொருள்களை நுகர்தல்

நுகர்தல் மூலமே மீள்சுழற்சித் தடம் பூரணமாகின்றது. பொருள்களை நுகரும் போது பின்வருவனவற்றுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

1. இலகுவாக மீள்சுழற்சி செய்யக் கூடியவை.

2. மீள்சுழற்சி செய்யப்பட்ட உள்ளடக்கங்களைக் கொண்டவை.

மீள்சுழற்சி சார் உற்பத்திப் பொருள்களை கொள்வனவு செய்வதால் ஏற்படும் நன்மைகள்

1. நுகரப்படும் இயற்கை வளங்களின் அளவைக் கணிசமாகக் குறைக்கின்றது.

2. சக்தி வீண் விரயமாவது தவிர்க்கப்படுகின்றது.

3. மீள்சுழற்சி சார் உற்பத்திப் பொருள்களுக்கான கேள்வியை அதிகரித்தல்.

4. சுழற்சி முறைப் பொருளாதரத்தை வலுவூட்டல்.

**இலங்கையில் மீள்சுழற்சி**

நமது தேசத்தில் சூழல் தரங்குன்றலுக்கு பிரதானமாக வழி வகுப்பது PET வகை நெகிழிக் கழிவுகளாகும். இவை அநேக சந்தர்ப்பங்களில் மீள்சுழற்சி செய்யப்படாது சூழலுக்கு வீசப்படுகின்றன. நிலைபேறற்ற கழிவு முறைமைகள் மூலம் இவ்வாறான கழிவுகள் இலகுவில் சமுத்திரம் மற்றும் இதர நீரியல் வளங்களை இலகுவில் மாசடையச் செய்கின்றன. வீட்டுக் கழிவுகளை குறிப்பாக நெகிழிக் கழிவுகளை எரிப்பது சூழலுக்கு பெரிதும் தீங்கானது.

இலங்கையில் மீள்சுழற்சி தொடர்பான எண்ணக்கருவை ஸ்தாபிப்பதற்கு பின்வரும் உத்திகளைக் கையாளலாம்

1. நிலைபேறான மீள்சுழற்சி முறை ஒன்றை உருவாக்கல்.

2. நெகிழிக் கழிவுகளை மீள்சுழற்சி செய்வது தொடர்பான அறிவூட்டல்.

3. மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

4. நிலைபேற்றுத்தன்மை மற்றும் மீளுருவாகும் தன்மையை உறுதி செய்தல்.

எமது யாழ் மாநகர சபையானது தற்பொழுது மீள்சுழற்சிமுறைக்காக திண்மக்கழிவுகளை தரம் பிரித்தலை நடைமுறைப்படுத்துகிறது. இதனை வினைத்திறனாக்குவதற்கு அனைவரினதும் பங்கு மிகவும் அவசியமானது.



PET நெகிழிக் கழிவுகளை சேகரித்து மீள்சுழற்சிக்கு வழங்குவதற்கான செயல் திட்டம் ஒன்றினை யாழ் பல்கலைக்கழக இரசாயனவியல் கழகம் செயல்படுத்தி வருகிறது. இதனை ஊக்கிவிப்பதற்காக ஒரு திறன்மிகு செயலி அடிப்படையில் அமைந்த சேகரிப்பானை Idea Factory மற்றும் Cocacola இலங்கை ஆகியவற்றின் அனுசரணையில் நிறுவவுள்ளது. இதன்மூலம் சிறந்த முறையில் PET நெகிழி கழிவை சேகரிக்கும் மாணவருக்கு வெகுமதிகள் வழங்கி மீள்சுழற்சி மூலமாக திண்மக்கழிவகற்றலில் ஊக்குவிக்கப்படுவார்கள்.

**Earth provides enough to satisfy everyman's need, but not every man's greed-Mahatma Gandhi**

**தொகுப்பாளர்கள்:-**

**கலாநிதி.பூ. ஐங்கரன்**
**(சிரேஷ்ட விரிவுரையாளர், இரசாயனவியல் துறை, யாழ் பல்கலைக்கழகம்)**

**திரு. சு. சிவானுஜன்**
**(இரசாயனவியல் துறை, யாழ் பல்கலைக்கழகம்)**

காலைக்கதிர் Kalaikkathir

# பாகிஸ்தானின் தேவைக்கேற்ப தீர்மானம் எடுக்கவே முடியாது!

## சீண்டுகின்றார் அமைச்சர் வீரசேகர



பாகிஸ்தான் அரசின் தேவைக்கேற்ப இலங்கையில் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது.

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார். புர்கா தடை தொடர்பில்

மிரிஹான பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கை அரசின் தேவைக்கேற்ற விதத்திலேயே நாம் செயற்படுகின்றோம்.

புர்கா தடை விடயம் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டு, பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்வரும் காலத்தில் எவ்வாறான பதில் கிடைக்கும் என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும் – என்றார்.

# முன்னணியின் வழக்கு: தீர்ப்பு 31 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது!

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,மார்.17

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் உள்ளிட்ட அக்கட்சியின் ஆறு உள்ளூராட்சி உறுப்பினர்களை கட்சியில் இருந்து நீக்கிய விடயத்தின் குடியியல் மேன்முறையீட்டு மாகாண நீதிமன்றின் தீர்ப்பு எதிர்வரும் 31ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாநகர சபை உறுப்பினரான வி.மணி வண்ணன் உட்பட ஆறுபேரை ஏற்கனவே கட்சியில் இருந்து நீக்கியதான அறிவித்தலை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் செயலாளர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பி வைத்திருந்தார். அவ்வாறு அனுப்பிய கடிதத்திற்கு அமைய 21 நாள்களிற்குள் உறுப்புரிமை இழந்தமை தொடர்பான அரச இதழ் பிரசுரிக்கப்படும் என தெரிவத்தாட்சி அலுவலர் மணிவண்ணன் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்தார்.

இந்த ஆறு பேரில் மணிவண்ணன் உட்பட நால்வர் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர்கள். மற்றைய இருவர் சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்கள். இந்த ஆறு உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் தெரிவத்தாட்சி அலுவலரின் இந்த முடிவிற்கு இடைக்காலத் தடைகோரி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தபோது மாவட்ட நீதிமன்றம் இந்த ஆறு உறுப்பினர்களையும் கட்சியில் இருந்து நீக்கும் முடிவிற்கு இடைக்காலத் தடை விதித்தது.

மாவட்ட நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடைக்கு எதிராக தமிழ்த் தேசிய மக் கள் முன்னணி அல்லது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் மாகாண குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மனுக்களில் உறுப்பினர் மயூரன் மற்றும் வி.மணிவண்ணனிற்கு எதிரான மனுக்கள் மீதான விசாரணைகள் நிறைவுற்று மயூரனின் வழக்கின் தீர்ப்பு இன்றும் மணிவண்ணனின் வழக்கிற்கான தீர்ப்பு 31ஆம் திகதியும் வழங்கப்படும் என நீதிபதிகளான ஏ.எச்.எம்.மனாப் மற்றும் சசி மகேந்திரன் ஆகியோர் திகதியிட்டிருந்தனர். எஞ்சிய நால்வரினது வழக்கு களும் எதிர்வரும் 24ஆம் திகதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. இதன் அடிப்படையில் உறுப்பினர் மயூரனின் வழக்கு தீர்ப்பிற்காக இன்றையதினம் மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது இதன் தீர்ப்பு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# குற்றவாளிகளை அரசு பாதுகாக்காது; உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!

## அமைச்சர் பீரிஸ் உறுதி



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய எவரையும் அரசு பாதுகாக்காது. உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்வரும் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் சாதகமான பெறுபேறுகள் கிடைக்கப்பெறும்.

– இவ்வாறு கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக் கையிலுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டியது அரசின் கடப்பாடாகும். எனவே, அந்த அறிக்கையிலுள்ள முக்கிய விடயங்கள் நிச்சயம் நடைமுறைப்படுத் தப்படும். இதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார். காலக்கெடுவும் விதிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை உட்பட அனைத்து இணைப்புகளும் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. எம்மிடம் ஒளிப்பதற்கு ஒன்றும் இல்லை. எனினும், தேசியப் பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயங்கள் வெளிப்படுத்தப்படமாட்டாது.

இதன்படி எதிர்வரும் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் இது தொடர்பில் சிறந்த பெறுபேறு கிடைக்கும் என எதிர்ப்பார்க்கின்றோம். அதன்மூலம் நம்பிக்கை ஏற்படும். தாக்குதலுடன் தொடர்புடைய எவரையும் பாதுகாக்க மாட்டோம். எவ ருக்கும் வெள்ளையடிப்பு செய்யவேண்டிய தேவை எமக்கு இல்லை. உண்மை கண்டறியப்படும். உரிய சட்ட நடவடிக்கை இடம்பெறும்.

அதேவேளை, ஷரீஆ சட்டம் தவறான அறிவிப்பு மட்டுமல்ல பயங்கரமானது. இந்நாட்டில் தனியார் சட்டங்கள் இருந்தாலும் அவை நாட்டின் பொதுசட்டத்துக்கு கட்டுப்பட்டவை. எனவே, நாட்டின் சட்டத்தை ஏற்கமுடியாது எனக் கூறுவது சட்ட விரோதமாகும். அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

புர்காவைத் தடை செய்வது சட்ட விரோதம் எனச் சிலர் கூறுகின்றனர். அவ்வாறு அல்ல. பிரான்ஸில்கூட பொதுவெளியில் புர்கா அணிய முடியாது. புர்காவைத் தடைசெய்வதற்கு புதிய சட்டம் இயற்றுமாறு ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலும் உள்ளது – என்றார்.

# வேதாரண்யம் மீனவர்களைத் தாக்கி கடலில் கொள்ளையர்கள் கைவரிசை





**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,மார்.17

இந்தியாவின் வேதாரண்யம் அருகே வெள்ளப்பள்ளத்திலிருந்து கடலுக்குள் மீன்பிடிக்கப் புறப்பட்ட 3 மீனவர்களை இலங்கை கடற் கொள்ளையர்கள் அரிவாளால் வெட்டி, படகின் இன்ஜினையும் கழற்றி சென்றமையால் 12 மணிநேரப் போராட்டத்துடன் கரை சேர்ந்தனர். இதனால் தமிழகத்தில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு நாகை மாவட்டம் வேதாரண் யம் அருகே உள்ள வெள்ளப்பள்ளம் மீனவ கொலனியைச் சேர்ந்தவர் நாகமுத்து (வயது 38). இவருக்கு சொந்தமான பைபர் படகில் அவரது தம்பி மூர்த்தி (வயது 36), ரவிச்சந்திரன் (வயது30) ஆகிய மூவரும் கடந்த 15ஆம் திகதி மதியம் வெள்ளப்பள்ளம் கடற்கரையிலிருந்து மீன்பிடிக்கச் சென்றனர். 3 மீனவர்களும் மீன் பிடித்துவிட்டு நேற்று (16ஆம் திகதி) ஊர் திரும்பிக் கொண்டிருந்தனர் எனவும் அப்போது நடுக்கடலில் ஓர் அதிவேக படகில் வந்த இலங்கை கடற்கொள்ளையர்கள் எனச் சந்தேகிக்கும் மூன்று பேர் வெள்ளப்பள்ளம் மீனவர்களின் படகை மறித்து படகில் ஏறி இந்திய மீனவர்கள் 3 பேரையும் வாள் கொண்டு வெட்டியும், கயிறு மற்றும் ஆயுதங்களால் தாக்கியும் காயப்படுத்தினர் எனக் கூறப்படுகின்றது.

இதன்போது இந்திய மீனவர்களின் 5 லட்சம் மதிப்பிலான திசை காட்டும் கருவி, டோர்ச் லைட், மீன்கள் போன்றவைகளுடன் அவர்கள் கரைசேரக் கூடாது என்ற நிலையில் படகில் இருந்த இன்ஜினையும் கழற்றி எடுத்து சென்றும், இங்கு வரக் கூடாது என எச்சரித்து அனுப்பினர் எனக் கரை திரும்பிய மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து படகில் இன்ஜின் இல்லாததால் உயிருக்கு ஆபத்தான இந்த மூன்று பேரும் படகில் பாயைக் கட்டி காற்றின் உதவியுடன் 12 மணி நேரப் போராட்டத்திற்கு பிறகு இன்று (17 ஆம் திகதி) காலை வெள்ளப்பள்ளம் கடற்கரையில் கரையேறினர். பாதிக்கப் பட்ட மீனவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# புர்கா, நிகாப்பைத் தடை செய்ய அரசு தீர்மானம் எடுக்கவில்லை

## வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு



இலங்கையில் புர்கா மற்றும் நிகாப் அணிவதைத் தடை செய்வதற்கான முன்மொழிவு மாத்திரமே முன்வைக்கப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயனாத் கொலம்பகே தெரிவித்தார்.

புர்கா மற்றும் நிகாப் தடை செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படும் ஊடக அறிக்கைகளுக்குப் பதிலளிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

புர்கா மற்றும் நிகாப் அணிவதற்குத் தடை விதிப்பதற்கான தீர்மானம் அரசால் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு அமைவாகவும், தேசியப் பாதுகாப்பு தொடர்பான முன்னெச்சரிக்கையாகவும் புர்கா மற்றும் நிகாப் தடை தொடர்பான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் கலந்து ரையாடி, தேவையான ஆலோசனைகளின் பின்னரே இறுதித் தீர்மானம் மேற் கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கு - கிழக்கில் நில ஆக்கிரமிப்பு; ஆராயும் சர்வதேச மாநாடு சனியன்று

## விக்கியின் ஒழுங்கில் சம்பந்தன் சிறப்பு விருந்தினர்




தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களான வடக்கு – கிழக்கில் தீவிரம் அடைந்துள்ள நில அபகரிப்பு தொடர்பிலும் இதற்கெதிராக மேற்கொள்ளவேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினரும் வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் 'தமிழர் தாயகத்தை இழத்தல்: தமிழர் நிலத்தை பாதுகாப்பதற்கான உபாயங்களை வகுத்தலும் பிரச்சினைகளை இனம் காணுதலும்' என்ற தலைப்பில் சர்வதேச மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை பிரித்தானிய நேரப்படி பிற்பகல் 12.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை (இலங்கை நேரம் மாலை 6.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை) சூம் (மெய்நிகர்) தொழில்நுட்பம் மூலம் இது நடைபெறுகிறது.

இந்த மாநாட்டில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆர்.சம்பந்தன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு நீதியரசர் விக்னேஸ்வரனுடன் இணைந்து இம் மாநாட்டை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த மாநாட்டில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் முன்னாள் உயர்ஸ்தானிகரும் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நீதியரசருமான திருமதி நவநீதம்பிள்ளை, பிரித்தானியாவின் சர்வதேச புகழ்பெற்ற முன்னணி வழக்குறைஞரும் பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டொனி பிளயரின் பாரியருமான செரி பிளயர் மற்றும் கனடாவின் சிறப்புமிக்கோர் பட்டியலில் இடம்பெற்றுள்ளவரும் 2010 ஆம் ஆண்டு மனித உரிமைகள் செயற்பாடுகளுக்காக நோபல் பரிசுக்கு முன்மொழியப்பட்டவருமான சர்வதேச மனித உரிமைகள் வழக்குறைஞர் டேவிட் மாடஸ் ஆகியோரும் இந்த மாநாட்டில் முதன்மை உரை ஆற்றுகின்றார்கள்.

இந்த மாநாட்டில் எல்லாமாக நான்கு அமர்வுகள் இடம்பெறவுள்ளன. முதலாவது அமர்வு 'வடக்கு – கிழக்கில் தமிழர் நிலங்கள் சட்டவிரோதமாக அபகரிக்கப்படுதல்' என்ற தலைப்பில் நடைபெறும். இந்த அமர்வில் வடக்கு – கிழக்கில் நடைபெறும் நில அபகரிப்பு தொடர்பில் 'முடிவற்ற போர்' என்ற ஆய்வு அறிக்கையை வெளியிட்ட அமெரிக்க சிந்தனை மையமான ஓக்லாண்ட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அனுராதா மிட்டால், ஒபாமா நிர்வாக வெள்ளை மாளிகை உத்தியோகத்தரும் தற்போது வட கரோலினா மாநிலத்தின் செனட்டருமான வெய்லி நிக்கல், மாற்று கொள்கைகளுக்கான நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் பவானி பொன்சேகா, முன்னாள் மாகாணக் காணி ஆணையாளர் குருநாதன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இரண்டாவது அமர்வு 'நில அபகரிப்பு தொடர்பிலான சட்ட மற்றும் அரசியல் சவால்கள் மற்றும் பரிகாரங்கள்' என்ற கருப்பொருளில் நடைபெறும். இந்த அமர்வில் யாழ் மாவட்ட மேல் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா, முன்னணி சட்டத்தரணி கே. எஸ். ரட்ணவேல், வடக்கு – கிழக்கு சிவில் அமைப்புக்கள் சார்பில் தவத்திரு வேலன் சுவாமிகள், வட மாகாண முன்னாள் அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

மூன்றாவது அமர்வு 'நிலம், வெளிநாட்டு முதலீடு மற்றும் இருதரப்பு முதலீட்டு உடன்படிக்கைகள்' என்ற தலைப்பில் நடைபெறும். இந்த அமர்வில், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் தகைசார் பேராசிரியரும் 'வெளிநாட்டு முதலீடு தொடர்பிலான சட்டம்' என்ற பிரபல்யம்மிக்க நூலை எழுதியவருமான கலாநிதி எம். சொர்ணராஜா, யாழ் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை முன்னாள் பேராசிரியர் வி. நித்தியானந்தம், பிரித்தானியா நோட்டிங்காம் பல்கலைக்கழக சர்வதேச மனித உரிமைகள் பேராசிரியர் கலாநிதி தமிழ் ஆனந்த விநாயகன், சட்டத்தரணி வெரோனிகா பாவ்லோஸ்காயா, மனித உரிமைகள் ஆலோசகர் லொரான்ஸோ பியோரிட்டோ ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

புலம்பெயர் தமிழ் இளையோர்கள் கலந்துகொள்ளும் அமர்வு ஒன்று இறுதியாக நடைபெறும்.

தமிழர் தாயகத்தில் நடைபெறும் நில அபகரிப்பை தடுக்கும் வழிவகைகளை ஆராயும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாடு தொடர்ந்தும் கால இடைவெளி விட்டு நடைபெறும். இந்த மாநாட்டின் இரண்டாவது பகுதி மே மாதம் அளவில் நடைபெறும். அதன்போது வடக்கு – கிழக்கில் நடைபெறும் நில ஆக்கிரமிப்பு பற்றிய ஆவணப்படம் ஒன்று வெளியிடப்படும்.

எதிர்வரும் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும் இம் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு எல்லா தமிழ்க் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படுகின்றது. இந்த மாநாட்டில் எவரும் கலந்துகொள்ளலாம். இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. சமூக வலைத்தளங்களிலும் இந்த மாநாடு நேரடியாக காண்பிக்கப்படும் என

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கலந்து கொள்வதற்கான தொடர்பு விவரங்கள்:–

**MARCH 20, 12:30 - 5:30 PM (UK Time)**
**Zoom Meeting ID: 925 7244 2450**
**Web link: http://bit.ly/TamilLand**
**Passcode: 238923**

# சாணக்கியத்தை இழந்து....

சிங்களப் பகுதிகளிலும் தமிழருக்கு எதிராக எழுந்த வன்முறைகளால் அகதிகள் பல முகாம்களுக்கும் சென்றனர். அப்படியான ஓர் அகதி முகாமான பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நித்தி உடனடி நிவாரணத்துக்காக ஏற்பாடுகள் செய்து, முழுநேரப் பொறுப்புகளையும் ஏற்று, தமிழ் தொழிற்சங்கவாதிகள், கொழும்பில் இருந்த இளைஞர் பேரவையைச் சேர்ந்தவர்கள் என்று பலரையும் அதில் இணைத்தார்.

தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகமும் தொடங்கப்பட்டு பலபேரின் வேண்டுதலால் அதன் தலைமைப் பதவியையும் நித்தி ஏற்று, தமிழர்கள் இனிமேல் சுயமரியாதையுடனும் தன்மானத்துடன் வாழவேண்டுமானால், தங்கள் பாரம்பரிய பிரதேசங்களில் தங்களது வாழ்வை அவர்களே தீர்மானிக்க வேண்டும் என்ற திடசங்கற்பத்தோடு மரணிக்கும் வரை பணியாற்றினார்.

தமிழர்களை நியாயமாக நடத்தக்கூடிய ஒரு சிங்களத் தலைமை இனிமேல் உருவாவதற்கு வழியேயில்லை என்ற திடசித்தத்துடன் தன்னோடு இணைந்து பணியாற்றியவர்களுக்கு தெளிவாக உபதேசம் செய்தார்.

அகதிகளான மக்களை மீள்குடியேற்றம் செய்ய நெடுங்கேணி, முல்லைத்தீவு, வவுனியா, செட்டிகுளம், திருகோணமலை என்று அந்தத் தள்ளாத வயதிலும், நீரிழிவுநோயினால் சீழ் வடிந்து உபாதை தந்து கொண்டிருந்த பாதத்துடனும், அந்தப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று தைரியம் கொடுத்து ஒரு 'கிழட்டு புலி' என்ற பெயரையும் பாதுகாப்பு படையினரிடம் பெற்றார்.

வடக்கில் மட்டுமல்ல, 1978 இல் சுறாவளியால் கிழக்கு பாதிக்கப்பட்டு செயலிழந்தபோது ஜே.ஆர்., நித்தியை முதலில் அழைத்து அப்பகுதிக்கு என்னென்ன நிவாரணங்கள் வேண்டும் என்று அறிந்து சொல்லுமாறு கேட்டார். அந்த வயதிலும், கிழக்கு மக்களின் புனரமைப்புக்காக தானும் கந்தசாமி மற்றும் சிலருடனும் ஜே.ஆர். ஏற்படுத்திக்கொடுத்த விமானப்படை விமானத்தில் சென்று பார்வையிட்டு, உடனடியாக யாழ்ப்பாணத்தில் இளைஞர் பேரவையில் இணைந்திருந்த பல இளைஞர்களை நிவாரணப் பணிக்கு உடனழைத்து, பணியாற்றினார்.

என்போன்ற பல பேரை நிவாரணப் பொருள்களோடு கல்முனை, பொத்துவில் ஊடாக மட்டக்களப்பை வந்து சேரச் சொல்லி, தங்கள் கைகளே தங்களுக்கு உதவவேண்டும் என்பதை செய்து காட்டி விட்டுத்தான் பின்னர் அரசாங்கம் செய்ய வேண்டிய பாரிய வேலைகளை ஜே.ஆருக்கு தெரிவித்தார்.

தேவானந்தாவை நான் 1977 இல் நடுத்தர வயதுள்ள இளைஞனாக நித்தியின் வீட்டில் சந்தித்தேன். நித்தி அவரைத் தனது சகோதரன் கதிரவேலுவின் மகன் என்றும், யாழ்ப்பாணத்தில் மத்திய கல்லூரியில் படிக்கும்போது, தமிழ் விடுதலையில் அக்கறை கொண்ட இளைஞர்களோடு திரிந்ததால் தகப்பனார் அவரை கொழும்புக்குப் படிக்க அனுப்பினார் எனவும், கொழும்பு இந்துக் கல்லூரியில் தற்போது படித்துக் கொண்டு தனக்கும் ஒத்தாசையாக இருப்பதாகவும் கூறினார்.

TRRO வின் பணிக்காக நித்தியைக் காண்பதற்கு நான் அவரது வீட்டுக்கு அடிக்கடி செல்வதால் எங்களது பரிச்சயம் வளர்ந்தது. இனிய சுபாவமுள்ள, மரியாதைகளை அறிந்த, பணிவுள்ள, பாசமான, நன்றியுள்ள இளைஞனாக டக்ளஸை அக்காலப்பகுதியில் நான் கண்டேன். அவருடைய தந்தை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றியவர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன் நன்கு உறவாடியவர். அவரதும் நித்தியின் இடதுசாரி தொழிற்சங்க ஈடுபாடுகளும் டக்ளஸ் தேவானந்தாவுக்கு இடதுசாரி தத்துவங்களிலும் நடைமுறைகளிலும் ஈடுபாட்டைத் தந்தன. நானும் நித்தியும், அக்காலத்து அரசியல் நிலைமைகள் பற்றி உரையாடும்போது தேவானந்தா அந்த உரையாடலில் பங்கு பற்றி கருத்துக்கள் சொல்வார்.

தமிழ்த் தேசியம் என்ற ஒன்றே எங்களுக்கான உரிமைகளுக்கும், மரியாதைக்குமான வழி என்ற நிலைப்பாட்டிற்குப் பொதுவாழ்வில் நித்தி வந்திருந்தாலும் தேவானந்தாவின் துடிதுடிப்பிற்கும் ஆயுத மார்க்கத்திற்கும் பெரியளவில் ஊக்கம் கொடுக்க வில்லை. டக்ளஸ் முதலில் படித்து முடிக்கவேண்டும் என்ற எண்ணமே நித்தியினதும் – முக்கியமாக லண் டனிலிருந்த நித்தியின் சகோதரர் சச்சிதானந்தாவி னதும் – விருப்பமாகவும் இருந்தது.

தொடரும்..

# மத ஒற்றுமை குறித்த சட்டத்தை அரசாங்கம் திரும்பப்பெறவேண்டும்

## மீனாக்ஷி கங்குலி வலியுறுத்தல்

இன, மத ஒற்றுமையை சீர்குலைத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களை 2 வருடங்கள் தடுப்புக் காவலில் வைக்க அனுமதிக்கும் உத்தரவை இலங்கை அரசாங்கம் உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

நேற்று (புதன்கிழமை) அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் சிறுபான்மையினரை சித்திரவதைக்குள்ளாக்கவும் விசாரணையின்றி நீண்+டகாலமாக தடுத்து வைக்கும்வகையில்குறித்தசட்டம்கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இம்மாதம் 9 ஆம் திகதி 2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட முக்கிய மாற்றங்கள் பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தைக் கடுமையாக விரிவுபடுத்துகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்களுக்கான கண்காணிப்பை வலுப்படுத்தவும் பொறுப்கூறலை உறுதி செய்யவும் மனித உரிமைகள் பேரவை பரிசீலித்து வருகின்ற நிலையில் இந்த கட்டுப்பாடு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவரது அடிப்படை உரிமைகளை மீறி சிறுபான்மையினரை எளிதில் குறிவைக்க அனுமதிக்கும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை புர்கா தடை மற்றும் 1,000 இற்கும் மேற்பட்ட இஸ்லாமிய பாடசாலைகளை மூடத் திட்டமிட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவின் அறிவிப்பு மத சுதந்திரத்துக்கான உரிமையை கடுமையாக மீறும் செயற்பாடு என மீனாக்ஷி கங்குலி கூறினார்.

குறிப்பாக முஸ்லிம்கள் மற்றும் தமிழர்களை குறிவைக்க ராஜபக்ஷ அரசாங்கம் பயங்கரவாத தடுப்பு சட்டம் மற்றும் பிற சட்டங்களை பயன்படுத்தியுள்ள அதே நேரத்தில் சிறுபான்மையினருக்கு எதிராக வன்முறை மற்றும் பாகுபாட்டை வெளிப்படுத்துபவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஒடுக்குமுறைகளைத் தொடர்ந்துகொண்டு ஜெனிவாவில் எவ்வாறு வெல்ல முடியும்?

## அரசைக் கேள்விக்கணையால் துளைத்தெடுக்கின்றார் ரிஷாத் எம்.பி.



கொழும்பு, மார்ச் 18

இலங்கையில் புர்காவைத் தடைசெய்யும் தீர்மானத்தை அரசு உடனடியாக வாபஸ்பெற வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

அதேநேரம், இனவாதிகளைத் திருப்திப்படுத்தும் இவ்வாறான செயற்பாடுகள் சர்வதேச நாடுகளிடமிருந்து எமது நாட்டை தனிமைப்படுத்தும் சூழலை ஏற்படுத்துகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் புர்காவைத் தடை செய் வது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முஸ்லிம்களை இலக்கு வைக்கும் இவ்வாறான நிகழ்ச்சி நிரல்களை, அரசு கைவிடுவதாகத் தெரியவில்லை. ஆட்சிக்கு வர உதவிய இனவாதிகளைத் திருப்திப்படுத்தவே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. .

அத்தோடு கொரோனா சூழ்நிலையில் முகக்கவசம், மூக்கை மறைத்தல் என்பன கடைப்பிடிக்கப்படும் காலமிது. இதைக் கூடப் புரிந்துகொள்ளாமல், முஸ்லிம்களைப் பழிவாங்கும் மனநிலையில் தான் இந்த அரசு நடந்துகொள்கின்றது.

அரபு நாடுகளின் நண்பன் எனக் கூறும் இந்த அரசு, அரபு நாடுகளிலும் முஸ்லிம் உலகிலும் விரும்பப்படும் ஆடைகளுக்கு அடிப்படைவாதச் சாயம் பூசுவது விந்தையும் வேடிக்கையாகவும் உள்ளது.

இறுதிக்கட்டப் போரிலும் கூட, புர்கா மற்றும் ஹிஜாப் போன்ற முஸ்லிம்களின் கலாசார ஆடைகளுக்குத் தடை விதிக்கப்படவில்லை. அரசு தங்களுக்குப் பிடிக்காத ஒருசில அரசியல்வாதிகளைப் பழி தீர்ப்பதற்காக, ஒட்டுமொத்த முஸ்லிம்களின் கலாசார நம்பிக்கையைக் கொச்சைப்படுத்துவதா? சமூகங்கள் மீதான ஒடுக்கு முறைகளைத் தொடர்ந்து கொண்டு ஜெனிவாவில் எவ்வாறு வெல்ல முடியும்?

இலங்கையில் புர்காத் தடை வருமாக இருந்தால், முஸ்லிம் நாடுகளிலிருந்து மட்டுமல்ல, முகத்தை மறைக்கும் எந்தவொரு முஸ்லிம் பெண்ணும், சுற்றுலாப் பயணியாக இலங்கைக்கு வரப் போவதில்லை.

எமது நாட்டின் சுற்றுலாத்துறையில் இது பாதிப்பை ஏற்படுத்தி, அந்நியச் செலாவணியில் பாரிய தாக்கத்தையும் ஏற்படுத்தும் என்பதை அரசு புரிந்து கொள்ளல் அவசியம் – என்றார்.




# தவக்காலம்

## எம் வாழ்வே நற்சாட்சியமாக அமைய வேண்டும்



நடந்தேறிய ஒரு நிகழ்வுக்குச் சான்றுகள் இருக்கும் போதே அது வரலாறு ஆகின்றது. சான்றுகள் இல்லாத போது சட்டம் கூட விதி விலக்காகிடும். சான்றுகள் மூலமே உண்மை மெய்ப்பிக்கப்பட்டுகின்றது. விவிலியத்திலே கூறப்பட்டுள்ள சான்றுகளோ, உலகப் படைப்பின் தொடக்கமும் மனித வாழ்வின் வரலாறும் கடவுளின் மூலமே ஆரம்பிக்கப்பட்டன என்பதற்கு, விஞ்ஞான ஆதாரங்களுடன் சான்று பகர்கின்றன. விவிலியத்திலே கூறபடபட்ட இடங்கள், சம்பவங்கள், அரசுகளின் ஆட்சிக்காலங்கள், மக்களின் வாழ்க்கை முறைகள் இன்றும் காணக்கூடிய பல சான்றுகளாக இருக்கின்றன.

மக்களின் பாவம் போக்கிடவே இறைவன் தம் திருமகனான இயேசுவை இவ்வுலகிற்கு அனுபாபினார். அவரைப் பற்றியே வேத வசனங்களும் இறைவாக்கினரும் முன்னுரைத்தார். ஆனாலும், மக்கள் எல்லோரும் இயே சுவை நம்ப மறுத்தார்கள். கடவுள் மனிதனாக முடியாது என்று, மனித அறிவிலே நம்பிக்கையுள்ளவர்களாக வாழந்தார்கள். இறைவனே தம்மைச் சான்று பகர வேண்டியவராக இருந்தார். இயேசுவுடைய வார்த்தையும் வாழ்வும் செயல்களும் ஒத்த தன்மையுடையதாக இருந்ததை பலர்கண்டு கொண்டார்கள். பலர் சான்றுகளைக் கண்டும் ஏற்க மறுத்தார்கள். இறைவன் பல தடவைகளில் இயேசு தாம் அனுப்பிய தம்முடைய திருமகன் என்பதை சான்றுப்படுத்தினார். மக்கள் மனங்களோ மழுங்கிப்போய் இருந்தன. இன்றும் கூட, சான்றுகள் இல்லாமல் இரக்கச்செயல்களையோ, அன்புச் செயல் களையோ, வல்ல செயல்களையோ நம்பாத உலகமே காணப்படுகின்றது.

அன்புச் செயல்களுக்கு ஆதாரங்கள் தேவையில்லை. இரக்கச் செயல்களுக்கு எழுத்து மூலங்கள் தேவையில்லை. எல்லாவற்றையும் ஆதாரங்கள்

வைத்துத்தான் நம்ப முடியுமென்றால் இறைவனின் இரக்கத்தை நாம் அடைந்து கொள்ள முடியாது. இறைவனின் பராமரிப்பைப் பெற்றுக்கொள்ளமுடியாது. கண்டு விசுவசிப்பவரை விட, காணாமல் விசுவசிப்போர் பேறு பெற்றோர் என்று தோழமையாருக்கு இயேசு கூறி, உயிர்ப்பை நம்ப மறுத்த தோமாவை, தமது சிலுவையில் அடித்த காயங்களில் தோமாவின் விரலை விட்டுப்பார்த்து, நம்பிக்கை கொள்ள இயேசு அவரை உறுதிப்படுத்தினார். ஆனால் நம்பிக்கை கொண்ட தோமாவே, இந்தியாவ்ல் இயேசுக்கு சாட்சியம் பகர்ந்து இந்தியாவில் திருத்தூதர் என்றும், இன்றும் போற்றப்படுகின்றார். சாட்சியம் கேட்டவரே சாட்சியமாக மாறி விடுகின்றார், இதுதான் இறைவல்லமையின் செயற்பாடாகும். எம் முன்மாதிரி கையான வாழ்வே சாட்சியமாக மாற வேண்டும் அதுவே பிறருக்குப் பயனுடையதாகும்.

**அன்ரனி பீற்றர் அபீர்ராஜன்**
**ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்**

# இ.போ.ச. பஸ்ஸைப் பிடிப்பதற்காக ஓட்டோவைக் கடத்திய மாணவர்கள்

## விபத்தில் சிக்கி படுகாயம்

இ.போ.ச. பஸ் சென்று விட்டதால், மாணவர்கள் இருவர், அந்த பஸ்ஸைப் பிடிக்க வீதியில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவைக் கடத்திச் சென்றபோது, அந்த ஓட்டோ விபத்துக்குள்ளாகி யதில், அவ்விரு மாணவர்களும் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து ஹப்புத்தளை பகுதியின் மேல் விகாரகலை எனும் இடத்தில் இடம் பெற்றுள்ளது.

ஹப்புத்தளையிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் தரம் 8 இல் கல்வி கற்று வந்த இம்மாணவர்கள் விபத்தில் கடுங்காயங்களுக்குள்ளானதால், ஹப் புத்தளை பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு, ஆரம்ப சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. அதையடுத்து, அவ்விருவரும் தியத்தலாவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, தீவிர சிகிச்சைக்குற்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்விரு மாணவர்களும் பாடசாலை விட்டு, வீடு செல்ல இ.போ.ச. பஸ் தரிப்பிடத்துக்குச் சென்றனர். பஸ் சென்று விட்டதை அறிந்த இம்மாணவர்கள் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவைக் கடத்திக்கொண்டு, குறிப்பிட்ட பஸ்ஸைப் பிடிக்கச் சென்றனர். ஆனால், கடத்திச் சென்ற ஓட்டோ, பாதையை விட்டு விலகி, தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.03.2021 இல் வெளியிடப்பெற்றது